

கலைஞர் 100
1924 - 2023

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 82 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 14 – செவ்வாய்க்கிழமை 31 அக்டோபர் 2023 – கோவை ★★ 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 82: Thiruvalluvar Year - 2054 - Ayppasi 14 - Tuesday 31 October 2023 - Kovai ★★ 8 Pages ₹5.00


## ‘ஈ டிவி பாரத்’ செய்தித்தளத்திற்கு அளித்த

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி 13 மொழிகளில் வெளியானது!

**சென்னை, அக். 31 -**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஈ டிவி பாரத் செய்தித்தளத்திற்கு அளித்துள்ள இப்பேட்டி இந்தியா முழுவதும் 13 மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.**

கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ‘ஈடிவி பாரத்’ செய்தித் தளத்துக்கு அளித்த நேர்காணலின் விவரம் வருமாறு:-

**நெறியாளர் :** *தமிழ்நாட்டின் முதலமைச்சராக மக்கள் நலத் திட்டங்கள் பலவற்றைச் செயல்படுத்தி வருகிறீர்கள். காலை உணவுத் திட்டமாக இருக்கட்டும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டமாகட்டும் பெரும் பொருட்செலவு வைக்கக் கூடிய இத்திட்டங்களைச் செயல்படுத்துவதில் மாநில அரசுக்கு இருக்கும் சவாலாக எதைக் கருதுகிறீர்கள்?*

தற்போதைய ஒன்றிய அரசின் பாரபட்சமான நிதி ஒதுக்கீட்டு அணுகுமுறை போன்ற சவால்களின் தாக்கத்திலிருந்து முழுமையாக விடுபட முடியாவிட்டாலும், இரண்டு ஆண்டுகளில் திராவிட முன்னேற்றக் கழக அரசு தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு சென்றிருக்கிறது. தமிழ்நாட்டை இன்று இந்தியாவே திரும்பிப் பார்க்கும் விதமாக, தேர்தலில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வருகிறது. ஆகவே இந்தியாவுக்கே முன்னோடியான இந்த மக்கள்நலத் திட்டங்களைத் திறம்பட செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

**நெறியாளர் :** *வடக்கில் வலதுசாரிகளின் பெரும்பலமாக இருக்கும் இந்துத்வா அடிப்படையிலான ஒருங்கிணைப்பை உடைக்க வேண்டிய தேவை இருப்பதாகக் கருதுகிறீர்களா? இதனை உடைத்து*

ஆகவே, பா.ஜ.க.வின் மதவாத அரசியலுக்கு எதிராக உள்ள அனைத்து ஜனநாயக சக்திகளையும் ஒருங்கிணைத்து, தேர்தல் களத்தில் உள்ள வெற்றி வாய்ப்புகளுக்கேற்ப கூட்டணிக் கட்சிகளிடையே விட்டுக் கொடுக்கும் தன்மையை ஏற்படுத்தி, மக்களின் பேராதரவுடன் வெற்றிபெறுவதே இந்தியா கூட்டணியின் தேர்தல் உத்தி. அதில் வெற்றி பெற முடியும் என்பதை சமீபத்திய இடைத் தேர்தல்கள், கர்நாடக மாநிலச் சட்டமன்றத் தேர்தல் போன்றவை காட்டியிருப்பதைப் பார்த்திருப்பீர்கள்.

### தேசிய அரசியலில் தி.மு.க.வின் பங்களிப்பு மிகப்பெரியது!

**நெறியாளர் :** *தி.மு.க. இப்போது தேசிய அரசியலில் அழுத்தமாக காலூன்ற முயல்கிறதா? உங்கள் உரைகள் முன்னெப்போதும் இல்லாத அளவில் இந்தியிலும்*

**சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க தமிழ்நாட்டில் களம் அமைத்துக் கொடுத்தவர் கலைஞர்.**

**சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் தலைமையிலான தேசிய முன்னணி அரசின் முதுகெலும்பாக இருந்தது தி.மு.கழகம். அதன் காரணமாக இதர பிற்படுத்தப்பட்டவர்களுக்கான 27% இடஒதுக்கீடு வழங்க வித்திட்டு, அணையா விளக்கான “சமூக நீதி”யை இந்தியா முழுமைக்கும் ஏற்றி வைத்தது.**

**தி.மு.க. இருக்கும் இடத்தில் மதவாதம் இருக்காது என்ற பாராட்டைப் பெறும் விதத்தில், குறைந்தபட்ச பொது செயல்திட்டத்துடன் வாஜ்பாய் அரசுக்கு ஆதரவளித்து, இந்தியாவில் கூட்டணி அரசு தன் முழுமையான ஆட்சிக்காலத்தை நிறைவு செய்ய முடியும் என்பதற்கு உறுதுணையாக நின்று, ஒன்றியத்தில்**

**நெறியாளர் :** *ஒன்றிய அரசு புதிதாகக் கொண்டு வரும் மசோதாக்களுக்கு இந்தியில் பெயர் வைக்கிறது. ஏற்கனவே உள்ள சட்டங்களும் இந்தியில் பெயர் மாற்றம் செய்யப்படுகின்றன. இந்தி ஆதிக்க எதிர்ப்புக்காக அறியப்பட்ட தி.மு.க.வும் தமிழ்நாடும் இந்த விஷயத்தில் என்ன செய்யப் போகின்றன?*

### பா.ஜ.க.வின் ‘இந்தி’ திணிப்பை கடுமையாக எதிர்க்கிறது தி.மு.க.!

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** இதுகுறித்து நாடாளுமன்ற மாநிலங்களவை, மக்களவை இரண்டிலுமே தி.மு.க.வின் எம்.பி.,க்கள் கவனத்தை ஈர்த்திருக்கிறார்கள். முழுக்க முழுக்க இந்தியிலான அறிவிப்புகள், அழைப்பிதழ்களைக் கிழித்தெறிந்து எதிர்ப்பைக் காட்டியிருக்கிறார்கள்.

பா.ஜ.க. அரசின் ஒரே நாடு, ஒரே




**தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் :-** திராவிட மாடல் அரசின் சிறப்பான திட்டங்களாக நீங்கள் குறிப்பிடும் இந்தத் திட்டங்களின் வரிசையில் மகளிருக்கான விடியல் பயணம் திட்டமும் முக்கியமானது. இவை அனைத்துமே அன்றாடத் தேவைக்கான திட்டமாக மட்டுமின்றி, எதிர்கால வளர்ச்சிக்கான அடித்தளமாகவும் அமைந்துள்ள காரணத்தால், இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதில் எத்தகைய சவால்கள் இருந்தாலும் அதனை முழுமையாக நிறைவேற்றித் தருவதில் திராவிட மாடல் அரசு உறுதியாக இருக்கிறது.

### சவால்களை எதிர்கொண்டு திறம்பட ஆட்சி நடக்கிறது!

முந்தைய அ.தி.மு.க. ஆட்சியின் பத்தாண்டுகாலத்தில் உருவாக்கப்பட்ட கடன் சுமை - நிதிப் பற்றாக்குறை, நிர்வாகச் சீர்கேடு போன்றவற்றை சமாளித்து,

*வாக்குகளைப் பெற இந்தியா கூட்டணியின் உத்தி என்ன?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:-** மதவாதம் என்பதைத் தவிர பா.ஜ.க.விடம் வேறு கொள்கை எதுவும் இல்லை! ஆட்சிக்கு வந்தாலும், சாதனைகளைக் காட்டி வாக்குகளைப் பெற முடியவில்லை. வெறுப்பரசியலை வைத்தே வாக்கு பெற நினைக்கிறார்கள்.

### மதவாதத்தை நம்பாமல் கொள்கைகளை நம்பி நிற்கிறோம்!

ஆனால் இந்தியா கூட்டணியின் வலிமை என்பது மதநல்லிணக்கம். நாங்கள் அரசியல்சட்டம் வரையறுக்கும் கொள்கைகளை நம்பி நிற்கிறோம். பன்முகத்தன்மை கொண்ட இந்திய மாநிலங்களின் உரிமைகளை மதித்தல், மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் மீது கவனம் குவித்தல் போன்றவற்றில் நம்பிக்கை வைத்து நிற்கிறோம்.

*வெளியாகின்றன. பிரதமராகும் லட்சியம் தி.மு.க. தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு இருக்கிறதா?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:- தேசிய அரசியலில் தி.மு.க. ஏற்கனவே மூன்றாவது பெரிய கட்சியாக இருக்கிறது. தன் அழுத்தமான முத்திரையை கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாகப் பதித்து இன்றைக்கு இந்தச் சிகரத்தை எட்டியுள்ளது.**

**வங்கிகள் தேசியமயம் உள்ளிட்ட முற்போக்கான செயல்பாடுகளுக்காக பிரதமர் இந்திரா காந்தி அவர்களின் அரசுக்கு உறுதுணையாக நின்று தேசிய அரசியலில் தி.மு.க.வின் முத்திரையைப் பதிக்கச் செய்தவர் தலைவர் கலைஞர்.**

**நெருக்கடி நிலைக் காலத்தில் இந்தியாவின் எந்த மாநிலமும் முன்னெடுக்காத ஜனநாயக உரிமைக்குரலை முன்னெடுத்து, வடஇந்திய அரசியல் தலைவர்களும்**

**நிலையான ஆட்சிக்கு வித்திட்டது கலைஞரின் தி.மு.கழகம்தான்.**

**இரண்டு முறை டாக்டர் மன்மோகன் சிங் பிரதமராகப் பொறுப்பேற்ற ஐக்கிய முற்போக்குக் கூட்டணியிலும் தி.மு.க. முதன்மையாக இருந்தது. குடியரசுத் தலைவர் தேர்தல்களில் தி.மு.க.வின் நிலைப்பாடுகள் தேசிய அளவில் கவனம் பெற்று, வெற்றிகரமாக அமைந்துள்ளன. தலைவர் கலைஞரின் வழியில், நாட்டின் இன்றையச் சூழலையும், சமூக வலைதளங்கள் உள்ளிட்ட தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியைக் கருத்தில்கொண்டும் இந்தியா கூட்டணியின் செயல்பாட்டில் தி.மு.க. தன் பங்களிப்பை விரிவுபடுத்தியுள்ளது.**

**என் உயரம் எனக்குத் தெரியும் என்று சொன்னவர் எங்கள் தலைவர் கலைஞர். மு.க.ஸ்டாலினுக்கும் தன் உயரம் நன்றாகத் தெரியும்!**

மொழி என்கிற மறைமுகத் திட்டம், தமிழை மட்டுமின்றி இந்தியாவின் பிற மாநிலங்களில் பேசப்படும் அவரவர் தாய் மொழிகளுக்கும் எந்தளவு ஆபத்தை உண்டாக்கும் என்பதை தி.மு.க. தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. பல மாநிலங்களிலும் இதுகுறித்த விழிப்புணர்வு நிகழ்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. எங்களைப் பொறுத்தவரை நாங்கள் எந்த ஒரு மொழிக்கும் எதிரிகள் அல்ல.

எங்கள் மொழி மீது எந்தவொரு மொழியைத் திணித்தாலும் அதை உறுதியாக எதிர்ப்பவர்கள். அந்த நிலை தொடரும். நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு, அமையவிருக்கிற புதிய ஆட்சியில் அனைத்து மொழிகளுக்கும் உரிய உரிமையும் முக்கியத்துவமும் சமமாக வழங்கப்படும்.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 31-10-2023

# பொய்ப் பிரமாணம் எடுத்துள்ள ஆளுநர் 1

**வா**யைத் திறந்தாலே பொய்யும் புளுகும்தான் ஆளுநர் ஆர்.என். ரவிக்கு வருகிறது. ஒரு சம்பவத்தை வைத்து அவர் நூற்றுக்கணக்கான பொய்களைச் சொல்லத் தொடங்கி விட்டார்.

ஆளுநர் மாளிகை இருக்கும் சாலையில் கடந்த 25 ஆம் தேதி என்ன நடந்தது?

**25.10.2023 அன்று மதியம் 3 மணியளவில், கருக்கா வினோத் (42 வயது - E-3 தேனாம்பேட்டை காவல் நிலையத்தின் வழக்கமான குற்றவாளி) என்பவர் ஆளுநர் மாளிகை அருகே தனியாக சாதாரணமாக நடந்து வந்தார். பெட்ரோல் நிரப்பிய நான்கு பாட்டில்களைக் கொண்டு வந்து, அவற்றை ஆளுநர் மாளிகை அமைந்துள்ள சர்தார் படேல் சாலையில் எதிர்ப்புறத்தில் இருந்து எறிய முயன்றார். ஆளுநர் மாளிகையின் வெளிப்புறத்தில் பாதுகாப்புப் பணியில் இருந்த தமிழ்நாடு காவல்துறை போலீசாரால் தடுக்கப்பட்டார். அப்போது சம்பவ இடத்திற்கு எதிரே சற்று தூரத்தில் இருந்து இரண்டு பாட்டில்களை வீசினார். அவை ஆளுநர் மாளிகையின் அருகே சர்தார் படேல் சாலையில் வைக்கப் பட்டிருந்த தடுப்பரண்களுக்கு அருகே விழுந்தது. பாதுகாப்பு போலீசாரால் உடனடியாக கைது செய்யப்பட்டார். காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப் பட்டு விட்டார். இச்சம்பவத்தால், பொருட்களுக்கோ அல்லது எந்த நபருக்கோ எவ்வித சேதமோ, காயமோ ஏற்படவில்லை.**

- இவ்வளவுதான் நடந்தது. ஆனால் ஆளுநர் மாளிகை சொல்லும் பொய், பெட்ரோல் பாட்டில்களை விடப் பெரிய பொய் பாட்டில்களாக இருக்கின்றன.

★ **பொய் 1:** ராஜ்பவன் மெயின் கேட் எண் 1 வழியாக பெட்ரோல் குண்டுகளை ஏந்திய மர்ம நபர்கள் சிலர் உள்ளே நுழைய முயன்றனர்.

**உண்மை:** குண்டுகளை ஏந்திய மர்ம நபர்கள் ஏராளமானவர்கள் என அப்படி யாரும் வரவில்லை. வினோத் என்ற ஒரே ஒரு நபர் மட்டும்தான் வந்தார். அவரும் சாலையின் அந்தப் பக்கம் இருந்து வாசலை நோக்கித் தான் வீசினாரே தவிர, உள்ளே நுழைய முயற்சிக்கவில்லை.

நந்தனம் சிக்னலில் இருந்து நடந்தே வருகிறார் வினோத். நந்தனம் கலைக் கல்லூரி, சைதாப்பேட்டை பாலம், சின்னமலை வரை நடந்தே வருகிறார். அவர் தனி ஆளாகத் தான் நடந்து வருகிறார். அங்கிருந்து சைதை நீதிமன்றம் வழியாக நடந்து சென்றுள்ளார். இது ஆளுநர் மாளிகைக்கு எதிர்புறம் உள்ள சாலையாகும். இந்த சாலையைக் கடந்தால்தான் ஆளுநர் மாளிகை வாசலுக்கு செல்ல முடியும். சாலையை வினோத் கடக்கவில்லை. ஆளுநர் மாளிகைக்கு எதிரே நின்று ஆளுநர் மாளிகை முன்பு வீச முயற்சித்துள்ளார். அங்கு பணியில் இருந்த ஐந்து காவலர்கள் உடனே அவரை தடுத்து அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இவை அனைத்தும் வீடியோ காட்சிகளாக உள்ளன.

★ **பொய் 2:** பாதுகாப்புப் பணியாளர்கள் தாக்குதலைக் கட்டுப்படுத்த முயன்ற போதும், மற்றொரு பெட்ரோல் குண்டு வீசப்பட்டது. இதனால் பிரதான நுழைவாயிலுக்கு பலத்த சேதம் ஏற்படுத்தப்பட்டது.

**உண்மை:** பிரதான நுழைவாயிலில் பலத்த சேதமும் ஏற்படவில்லை. சிறு சேதமும் ஏற்படவில்லை. பாட்டில் வீசப்பட்டது பிரதான வாசலில் இருந்து 30 மீட்டர் தூரத்தில் - பேரிகாட் தாண்டி சாலையில்தான் விழுந்துள்ளது. எனவே நுழைவாயிலில் எந்த சிறு சேதமும் கிடையாது.

★ **பொய் 3** : வினோத்துடன் நிறையப் பேர் வந்துள்ளார்கள்.

**உண்மை:** கண்காணிப்புக் கேமரா பதிவுகளை ஆராய்ந்ததில், மேற்படி நபர் நந்தனத்தில் இருந்து சம்பவ இடம் வரை தனியாகவே வந்துள்ளார்.

★ **பொய் 4** : அந்த நபரை தப்பிக்க விட்டு விட்டார்கள்.

**உண்மை:** உடனடியாக அவர் கைது செய்யப்பட்டார். சரியாகச் சொல்வதாக இருந்தால் சம்பவ இடத்திலேயே கைது செய்யப்பட்டார்.

★ **பொய் 5** : அவர் மீது வழக்கு பதியவே இல்லை.

**உண்மை:** அன்றைய தினமே J-3 கிண்டி காவல் நிலையத்தில் அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. உடனடியாக அவர் IV-வது பெருநகர குற்றவியல் நடுவர் அவர்கள் முன்பு ஆஜர்படுத்தப்பட்டு, 09.11.2023 வரை சிறையில் வைக்கப்பட்டார்.

★ **பொய் 6** : ஆளுநர் அவர்களுக்கு எதிராக பகிரங்க மிரட்டல், அவதூறுப் பேச்சு மற்றும் தாக்குதல் போன்ற பல்வேறு சம்பவங்கள் நிகழ்ந்துள்ளதால் இந்த பாட்டில் வீச்சு சம்பவம் தொடர்பாக காவல்துறையினர் நியாயமான முறையில் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்யவில்லை.

**உண்மை:** குற்றவாளி கைது செய்யப்படுகிறார். நீதிமன்றத்தில் நிறுத்தப்படுகிறார். சிறையில் அடைக்கப்பட்டுகிறார். ஆளுநர் மாளிகைக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்படுகிறது. இதற்கு பின்னால் சதி ஏதாவது இருக்குமா என காவல் துறை விசாரிக்கிறது. இதற்கு மேல், மேல் நடவடிக்கை என்ன எடுக்க முடியும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

★ **பொய் 7**: உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை.

**உண்மை:** உடனடியாகவே நடவடிக்கை எடுக்கப்பட்டது.

★ **பொய் 8** : ஏப்ரல் 19, 2022 அன்று மயிலாடுதுறை சென்ற போது ஆளுநரின் வாகனம் தாக்கப்பட்டது. இது சம்பந்தமாக காவல்துறையில் புகார் தெரிவிக்கப்பட்டும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை.

**உண்மை:** ஆளுநரின் வாகனம் மற்றும் கான்வாய் அப்பகுதியை கடந்து சென்ற பின்னர் அங்கு கூடியிருந்தவர்களில் சிலர் கருப்புக்கொடிகளை சாலையில் வீசினர். அக்கொடிகள் ஆளுநரின் வாகனம் மற்றும் கான்வாய் முழுமையாக சென்றபின் பின்னால் வந்த வாகனங்கள் மீது விழுந்தன. இச்சம்பவம் தொடர்பாக மயிலாடுதுறை காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு 73 பேர் கைது செய்யப்பட்டனர். மேற்படி வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

ஆளுநரின் கான்வாய் மீது கற்கள் மற்றும் கட்டைகள் வீசப்பட்டன என்பது முற்றிலும் உண்மைக்கு புறம்பானதாகும்.

**- தொடரும்**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.10.2023) பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 116வது பிறந்த நாளையொட்டி, மதுரை, கோரிப்பாளையத்தில் உள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. எம்.எஸ். சங்கீதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள

# தமிழ்நாட்டு மீனவர்கள் 37 பேரை உடனடியாக விடுவித்திட நடவடிக்கை எடுத்திடுவீர்!

## ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, அக்.31–**

**இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த 37 மீனவர்களையும் அவர்களது 5 மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கக்கோரி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர். எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**



அக்கடிதத்தில், தமிழ்நாட்டைச் சேர்ந்த 37 மீனவர்கள், IND TN10MM985, INDTN10MM915, INDTN10MM717, INDTN10MM917 மற்றும் INDTN10MM972 ஆகிய பதிவு எண்களைக் கொண்ட மீன்பிடி படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற நிலையில், 28.10.2023 அன்று இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், இம்மீனவர்கள் மீன்பிடித் தொழிலை மட்டுமே வாழ்வாதாரமாக கொண்டுள்ளதாகவும், குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இவ்வாறான தொடர்ச்சியான கைதுகள் மீனவ சமூகத்தினரிடையே மிகுந்த மன உளைச்சலையும், வேதனையையும் ஏற்படுத்துவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக் கடற்படையினரின் இத்தகைய செயல்கள் தமிழ்நாட்டின் மீனவ சமுதாயத்தினரிடையே மன அழுத்தத்தையும் அச்ச உணர்வையும் ஏற்படுத்தியுள்ளது. தமிழ்நாட்டு மீனவர்கள் தங்களது கோரிக்கைள் ஏற்கப்படாமல் போவதாக உணர்கிறார்கள் என்று தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், நம் மீனவர்களின் உரிமைகளுக்காக ஒன்றிய அரசு மேலும் வலுவாகக் குரல் கொடுக்க வேண்டும் என்றும், அவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடும் வகையில் பேச்சுவார்த்தை மேற்கொள்ள வேண்டும் என்றும் தாம் விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ளார். பாக் வளைகுடா பகுதியில் நமது மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை பாதுகாக்க வேண்டும் என்ற கோரிக்கையை தாம் மீண்டும் வலியுறுத்த விரும்புவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

2023 அக்டோபர் மாதத்தில் மட்டும் தமிழ்நாட்டைச் சேர்ந்த 64 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதோடு, 10 மீன்பிடிப் படகுகள் இலங்கைக் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், மீனவர்கள் இதுபோன்று கைது செய்யப்படுவது தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்றும், இலங்கைக் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட படகுகள் விடுவிக்கப்பட வேண்டும் என்று தொடர்ந்து கோரிக்கை விடுக்கப் பட்டு வரும் நிலையில் தமிழ்நாட்டு மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவது தடையின்றி தொடர்வதாக வேதனையுடன் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இதற்கு முற்றுப்புள்ளி வைத்திடும் வகையில், இனியும் காலம் தாழ்த்தாமல் உடனடியாக உரிய நிலையான தூதரக வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழ்நாட்டு மக்கள் சார்பில் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்வதாகத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட அனைத்து மீனவர்களையும், மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக்கொண்டுள்ளார்.

### நாமக்கல் மேற்கு மாவட்டம்

# பள்ளிபாளையம் வடக்கு ஒன்றிய தி.மு.க. அலுவலகம்!

## அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார்! அமைச்சர் மா.மதிவேந்தன் - எஸ்.எம்.மதுரா செந்தில் பங்கேற்பு!

*நாமக்கல், அக். 31 -*

*நாமக்கல் மேற்கு மாவட்டம் பள்ளிபாளையம் வடக்கு ஒன்றிய தி.மு.க. அலுவலகம் திறப்பு விழா பல்லக்காபாளையத்தில் மாவட்டக் கழக செயலாளர் எஸ்.எம். மதுரா செந்தில் தலைமையில் நடைபெற்றது.*

*பள்ளிபாளையம் வடக்கு ஒன்றிய செயலாளர் நாச்சிமுத்து வரவேற்றார்.*

*வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் முன்னிலை வகித்தார். இவ்விழாவில் நகர்ப்புற உள்ளாட்சித் துறை அமைச்சர் கே. என்.நேரு கலந்து கொண்டு அலுவலகத்தை திறந்து வைத்தார். இவ்விழாவில் மாவட்ட அவைத் தலைவர் நடனசபாபதி, கழக சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் ஜே. கே.எஸ்.மாணிக்கம், ஒன்றிய செயலாளர் (மத்திய) செல்வம், (தெற்கு) இளங்கோவன், எலச்சிப்பாளையம் மேற்கு ஒன்றிய செயலாளர் செல்வராஜ், பொதுக்குழு உறுப்பினர் ஓ.ஆர்.செல்வராஜ்,, குமாரபாளையம் நகர மன்ற தலைவரும், குமாரபாளையம் வடக்கு நகர பொறுப்பாளருமான த. விஜய்கண்ணன், நகர் மன்ற துணைத் தலைவர் வெங்கடேசன், பள்ளிபாளையம் நகர மன்ற தலைவர் மோ.செல்வராஜ், தெற்கு நகர செயலாளர் ஞானசேகரன். பள்ளிபாளையம் நகர செயலாளர் குமார், ஆலாம்பாளையம் பேரூர் செயலாளர் கார்த்திக்ராஜ், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பாலாஜி, மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் கௌதம், மாணவர் அணி அமைப்பாளர் பாலசுப்பிரமணியம், மாவட்ட விளையாட்டு மேம்பட்ட அணியின் அமைப்பாளர் ரமேஷ், வடக்கு ஒன்றிய பொறுப்பு குழு உறுப்பினர்கள் ஜான் பீட்டர் ராஜ், கார்த்தி, ராஜேந்திரன், விஜயகுமார், மாவட்ட இந்து சமய அறங்காவல் குழு உறுப்பினர் சௌந்தரம், அயலக அணி அமைப்பாளர் சாதிக் பாஷா, மேற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஜெகதீசன் கதிரவன் சேகர், முரளி மற்றும் சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.*

### தமிழ்நாட்டின் விரைவான முன்னேற்றத்திற்காக

# தொலைநோக்குடன் சிறந்த திட்டங்களைத் தீட்டி வருகிறார் முதல்வர்!

## மும்பையில் முதலீட்டாளர் மாநாட்டில் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பெருமிதம்!

*மும்பை, அக்.31-*

*மும்பையில் நடைபெற்ற உலகளாவிய முதலீட்டாளர்கள் சந்திப்பில் (TNGIM) 2024 - வணிகத் தலைவர்கள், முதலீட்டாளர்கள், வர்த்தக பிரதிநிதிகளுடன் தொழில் முதலீட்டு, ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா ஆற்றிய உரையின்போது தமிழ்நாடு நல்ல ஒரு திறமையான தலைமை மற்றும் நிர்வாகத்தால் முன்னிலை பெற்று வருகிறது. இந்த மாநிலத்தில் தான் மிகவும் திறமையான மனித வளங்கள் மற்றும் கொள்கைகளில் வேரூன்றிய நிர்வாக கட்டமைப்பு உள்ளது என்றார்.*

*மேலும் தமிழ்நாட்டில் தொழில்துறை வளர்ச்சி மற்றும் பன்முகத்தன்மையை எடுத்துரைத்த அவர், "ஆட்டோமொபைல், மின்சார வாகனங்கள், உலகளாவிய திறன் மையங்கள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உதிரி பாகங்கள் மற்றும் மருத்துவ சாதனங்கள் உற்பத்தி போன்ற துறைகளில் எல்லாம் நாங்கள் முன்னணியில் இருக்கிறோம்.*

*முதலமைச்சர் அவர்களின் நிர்வாக திறமையால் வரும் 2030 ஆம் ஆண்டுக்குள் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதார என்ற இலக்கை நோக்கி தமிழ்நாடு விரைவான முன்னேற்றத்தை அடைய இருக்கிறது' என அமைச்சர் மேற்கோள் காட்டினார்.*

*"வரும் 2024 ஜனவரி 7 மற்றும் 8 ஆம் தேதிகளில் நடைபெறவிருக்கும் தமிழ்நாடு உலகளாவிய முதலீட்டாளர்கள் மாநாட்டின் வாயிலாக மாநிலத்தின் பலம் மற்றும் வளர்ச்சித் திறனை வெளிப்படுத்த சிறந்த ஒரு தளமாக விளங்குகிறது" என்று அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா கூறினார்.*




மும்பையில் நடைபெற்ற உலகளாவிய முதலீட்டாளர்கள் சந்திப்பில் (டி.என்.ஜி.ஐ.எம்.) 2024– வணிகத் தகவல்கள் முதலீட்டாளர்கள், மற்றும் வர்த்தக பிரதிநிதிகளுடன் தமிழ்நாடு தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா உரையாற்றினார்.

# 13 மொழிகளில் வெளியான முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

## முதல் பக்கத் தொடர்ச்சி

**நெறியாளர்:** *வாட்ஸ்அப் போன்ற சமூகவலைதளங்களை பா.ஜ.க. தேர்தல் பிரச்சாரத்திற்காக பயன்படுத்தும் விதம் குறித்து வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இது காலத்திற்கேற்ப டிஜிட்டல் ஊடகங்களைக் கையாளும் வியூகமா அல்லது அதிகார அத்துமீறலா? இதுபற்றிய உங்களின் கருத்து என்ன?*

**சோஷியல் மீடியாக்களில் பரப்பப்படும் பா.ஜ.க.வின் பொய்யுரைகளை முறியடிப்போம்!**

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** ‘வாட்ஸ்அப் யுனிவர்சிட்டி’ என்பது பா.ஜ.க.வின் பொய்ப் பரப்புரைகளுக்குப் பொதுமக்கள் வைத்துள்ள பெயர். டிஜிட்டல் ஊடகங்கள், தொலைக்காட்சி ஊடகங்கள், அச்சு ஊடகங்கள் இவற்றில் ஊடுருவலையும் அதிகார பலத்தையும் பயன்படுத்துவது பா.ஜ.க. அரசின் வழக்கமாக இருக்கிறது. சமூக வலைதளங்களிலும் இத்தகையப் போக்குகள் நிலவுவதை வாஷிங்டன் போஸ்ட் வெளிப்படுத்தியுள்ளது. அதிகார அத்துமீறல்களை அம்பலப்படுத்துவதன் ஒரு கோணம்தான், சில ஊடக நெறியாளர்களின் நிகழ்ச்சிகளில் பங்கேற்பதில்லை என்கிற இந்தியா கூட்டணியின் புறக்கணிப்பு நடவடிக்கை.

பத்திரிகைகள் - மீடியாக்கள் நடுநிலைமைக்குத் திரும்ப வேண்டும் என்பதே இதன் நோக்கம்! மற்றபடி டிஜிட்டல் மீடியா, சோஷியல் மீடியா போன்றவற்றில் பா.ஜ.க.வின் அதிகார அத்துமீறல்களை, பொய்ப் பரப்புரைகளை, அவிழ்த்து விடும் அவதூறுகளை முறியடிக்கும் வகையில் இந்தியா கூட்டணிக் கட்சிகள் ஒருங்கிணைந்த செயல்திட்டத்தை முன்னெடுத்து வருகிறது.

**நெறியாளர்:** *INDIA கூட்டணியின் தற்போதைய நிலை என்ன? கூட்டணியை ஒருங்கிணைக்கும் அல்லது இயக்கும் விசையாக எது உள்ளது?*

**பா.ஜ.க.வின் மக்கள் விரோதச் செயலே ‘இந்தியா’ கூட்டணியை ஒருங்கிணைக்கிறது!**

**முதல்வர் மு.க.ஸ்டாலின்: இந்தியக் கூட்டணி முதல் ரவுண்ட் வெற்றியைப் பெற்றிருக்கிறது. கர்நாடக மாநிலச் சட்டமன்றத் தேர்தல் உள்ளிட்ட இடைத்தேர்தல்களில் அந்த வெற்றி கிடைத்திருக்கிறது. பா.ஜ.க.வின் 9 ஆண்டுகால ஜனநாயக விரோத, அரசியல்சட்ட விரோத, மக்கள் விரோத ஆட்சியே இந்தியா கூட்டணியை ஒருங்கிணைத்திருக்கிறது. பா.ஜ.க.வுடன் இருக்கும் மற்ற நிழல் கூட்டணிகளான “அமலாக்கத்துறை” “வருமானவரித் துறை” போன்றவை மேலும் பல கட்சிகளை இந்தியா கூட்டணிக்கு வரவழைக்கும். அரசியல்சட்டமும் அதன் கொள்கைகளும், மக்களும்தான்தான் எங்கள் கூட்டணியை இயக்கும் விசை!**

**நெறியாளர்:** *கோயில்களின் கட்டுப்பாடு அறநிலையத்துறையிடம் இருப்பதை பிரதமர் நரேந்திர மோடி விமர்சித்துள்ளாரே! அவரின் குற்றச்சாட்டுகளை கவனித்தீர்களா? இதற்குத் தமிழ்நாடு அரசின் பதில் என்ன?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** தி.மு.க. ஆட்சிப்பொறுப்பேற்றபிறகு 1118 கோயில்களுக்கு குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளது. இந்து சமய அறநிலையத்துறைக்குச் சொந்தமான 5473 கோடி ரூபாய் மதிப்புள்ள 5820 ஏக்கர் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளது. இதனையெல்லாம் தெரிந்து கொள்ளாமல் பிரதமரும் பேசியிருக்கிறார். அதற்கு நான் ஏற்கெனவே பதில் அளித்துவிட்டேன்.

இன்றைக்கு பா.ஜ.க. ஆட்சியில் என்ன நடக்கிறது? தமிழ்நாட்டில் எய்ம்ஸ் மருத்துவமனையை கட்டித் தர இயலவில்லை. நீட் மசோதாவிற்கு ஒப்புதல் தர முடியவில்லை. மாநிலத்திற்கு உரிய நிதி உரிமை - மாநில உரிமையை வழங்குவதில்லை.

தமிழ்நாடு அரசுக்கு ஒத்துழைப்பு வழங்காமல், அரசியல் பேசி, அரசியல் சட்டப் பதவியான ஆளுநர் பதவியை அசிங்கப்படுத்திக் கொண்டிருக்கும் ஒருவரை ஆளுநராக வைத்து, தமிழ்மொழி, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு- தமிழ்நாட்டு இளைஞர்களின் வேலை வாய்ப்பிற்கு முட்டுக்கட்டை போடப்படுகிறது!

தமிழ்நாட்டிற்கு 9 ஆண்டுகால பா.ஜ.க. ஆட்சியில் செய்த சாதனைகள் ஏதுமில்லை. சிறப்புத் திட்டங்கள் ஏதுமில்லை. ஆகவே ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு என்ன செய்துள்ளது என்பதைச் சொல்லி வாக்குச் சேகரிப்பதில் பிரதமருக்கு நெருடல் இருக்கிறது. தமிழ்நாட்டிற்கு என்ன செய்தோம் என்பதைச் சொல்ல இயலாத நிலையில்- பா.ஜ.க. அரசின் தோல்வியைத் திசைதிருப்பவே தமிழ்நாட்டில் சிறப்பாகக் கோவில் நிர்வாகத்தைச் செய்து கொண்டிருக்கும் இந்து சமய அறநிலையத்துறையை விமர்சிக்கிறார்.

> **இன்றைக்கு பா.ஜ.க. ஆட்சியில் என்ன நடக்கிறது? தமிழ்நாட்டில் எய்ம்ஸ் மருத்துவ மனையை கட்டித் தர இயலவில்லை. நீட் மசோதாவிற்கு ஒப்புதல் தர முடியவில்லை. மாநிலத்திற்கு உரிய நிதி உரிமை-மாநில உரிமையை வழங்குவதில்லை.**
>
> **தமிழ்நாடு அரசுக்கு ஒத்துழைப்பு வழங்காமல், அரசியல் பேசி, அரசியல்சட்டப் பதவியான ஆளுநர் பதவியை அசிங்கப்படுத்திக் கொண்டிருக்கும் ஒருவரை ஆளுநராக வைத்து, தமிழ் மொழி, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு-தமிழ்நாட்டு இளைஞர்களின் வேலைவாய்ப்பிற்கு முட்டுக் கட்டை போடப்படுகிறது!**

**காவிரி உரிமை காப்பதில் உறுதியாக இருக்கும் எமது அரசு!**

**நெறியாளர் :** *நடப்பு ஆண்டில் காவிரி நீர்ப் பற்றாக்குறை பெரும் பிரச்சினையாக உருவெடுத்து உள்ளது. டெல்டா உழவர்களுக்கு இந்த ஆண்டிற்கான தீர்வு தான் என்ன? காவிரி விவகாரத்தில் அரசியல் ரீதியான தீர்வு சாத்தியமா?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** அரசியல் ரீதியான தீர்வு கிடைக்கவில்லை என்பதற்காகவே காவிரி நடுவர் மன்றம் துவங்கப்பட்டு, இறுதித் தீர்ப்பு தரப்பட்டு, அது உச்சநீதிமன்றத்தில் இறுதியும் செய்யப்பட்டுள்ளது. உழவர்களுக்குப் பாசனத்திற்கு வேண்டிய நீர் கிடைக்கவே தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றம், காவிரி மேலாண்மை ஆணையம் ஆகியவற்றில் வலியுறுத்தி, இதுவரை தண்ணீரைப் பெற்று வருகிறது. காவிரியில் தமிழ்நாட்டு உழவர்களின் - தமிழ்நாட்டின் உரிமையை காப்பதில் எனது தலைமையிலான அரசு என்றும் உறுதியாக இருக்கும்.

**சாதிவாரி கணக்கெடுப்பு - ஒன்றிய அரசின் நிர்வாகப் பட்டியலில் வருகிறது!**

**நெறியாளர் :** *மக்கள் தொகைக் கணக்கெடுப்புடன் சாதிவாரிக் கணக்கெடுப்பையும் சேர்த்து நடத்த வேண்டும் எனப் பிரதமர் நரேந்திர மோடிக்கு நீங்கள் கடிதம் எழுதி உள்ளீர்கள்... ஒன்றிய அரசை எதிர்பார்க்காமல் மாநில அரசே நடத்த வேண்டும் என சில தலைவர்கள் கூறி உள்ளனர். இது சாத்தியமா? தமிழ்நாடு அரசு சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்த வாய்ப்பு உள்ளதா?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின் :** தமிழ்நாடு சமூகநீதி மண். இன்றைக்கு இந்தியாவில் 69 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கும் மண். சாதிவாரிக் கணக்கெடுப்பைப் பொறுத்தமட்டில், “சென்ஸஸ்” என்ற மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஒன்றிய அரசின் நிர்வாகப் பட்டியலில் இருக்கிறது. அதனால்தான் தி.மு.க.வும் பங்கேற்ற ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் “சாதிவாரிக் கணக்கெடுப்பு” 2011இல் துவங்கப்பட்டது. அதற்குப் பிறகு வந்த பா.ஜ.க. அரசு அந்த கணக்கெடுப்பு முடிவை வெளியிடவில்லை. அமைச்சரவையிலேயே 2015இல் இதற்காக நிபுணர் குழு அமைத்தும் இன்று வரை சாதிவாரிக் கணக்கெடுப்பின் அந்த நிபுணர் குழு அறிக்கையையும் வெளியிடவில்லை.

மண்டல் கமிஷன் பரிந்துரை மூலம் எப்படி 27 விழுக்காடு இடஒதுக்கீடு இந்தியா முழுமைக்கும் உள்ள இளைஞர்களுக்கு ஒன்றிய அரசு வேலை வாய்ப்பு கல்வியில் இடஒதுக்கீட்டைப் பெற்றுத் தந்ததோ அது போல ஒன்றிய அரசு எடுக்கும் சாதிவாரிக் கணக்கெடுப்புதான் தமிழ்நாடு உள்பட இந்தியா முழுமைக்கும் சமூகநீதி கிடைக்க வழி வகுக்கும். ஆகவேதான் ஒன்றிய அரசு சாதிவாரிக் கணக்கெடுப்பை விரைந்து நடத்தி முடிக்க வேண்டும் என்று கடிதம் எழுதியிருக்கிறேன்.

**பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணி குறித்து எங்களுக்கு கவலையில்லை!**

**நெறியாளர் :** *பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணி உண்மையிலேயே முறிந்துவிட்டதா, இதனால் கூட்டணிக் கணக்குகளில் மாற்றம் ஏற்படுமா?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்: சமீபத்தில் மற்ற மாநிலங்களில், பா.ஜ.க.வுடன் இருந்த கூட்டணியை ஒரு கட்சி முறித்துக் கொண்ட பிறகு நடந்த நிகழ்வுகளை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இப்போது அ.தி.மு.க. பா.ஜ.க. கூட்டணி முறிவு காட்சியையும் பார்க்கிறீர்கள். ஆனால் உங்களுக்கே கூட்டணி முறிந்து விட்டதா இல்லையா என்ற சந்தேகம் எழுகிறது. அக்கூட்டணி முறிந்தாலும் முறியா விட்டாலும் எங்களுக்குக் கவலை இல்லை!**

**ஒன்றியத்தில் 9 ஆண்டுகாலம் பா.ஜ.க. ஆட்சியின் அலங்கோலங்களையும் தமிழ்நாட்டில் அ.தி.மு.க. ஆட்சியின் நிர்வாகச் சீர்கேடுகளையும் மக்கள் பார்த்திருக்கிறார்கள்.**

**இப்போது நல்லாட்சி தரும் தி.மு.க.வை, நல்ல பல மக்கள் திட்டங்களைத் தந்துள்ள இந்த ஆட்சியை, இந்தியாவே திரும்பிப் பார்க்கும் சாதனைகளை படைக்கும் தி.மு.க. ஆட்சியை தமிழ்நாட்டில் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.**

**நாங்கள் எங்கள் நல்லாட்சி மீது நம்பிக்கை வைத்து களத்திற்கு செல்கிறோம். 10 ஆண்டுகால அ.தி.மு.க. ஆட்சியின் அலங்கோலங்களை இரண்டரை ஆண்டுகளில் மாற்றி, நிர்வாக எஞ்சினை நேர்த்தியாக செலுத்திக் கொண்டிருக்கிறோம். ஆகவே தி.மு.க.வின் நல்லாட்சி, தி.மு.க. கூட்டணிக் கட்சிகளின் நல்லெண்ணம் போன்றவற்றை அடிப்படையாக வைத்து நாங்கள் மக்களைச் சந்திக்கிறோம். மக்கள் எங்களுடன் இருக்கிறார்கள்!**

இவ்வாறு தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

---

திருநெல்வேலி மாவட்டத்தில் மின்சாரம் தாக்கி

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, அக்.31-

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், அயன்சிங்கம்பட்டி கிராமம், மடத்துத் தெரு பகுதியைச் சேர்ந்தபேச்சிமுத்து (வயது 55) மற்றும் பேரின்பராஜா ஆகிய இருவரும் 28.10.2023 அன்று இரவு ஜமீன்சிங்கப்பட்டியிலுள்ள தங்களது வயலுக்கு நீர் பாய்ச்ச வாய்க்காலில் இறங்கி மடையைத் திறக்க முயன்ற போது எதிர்பாராதவிதமாக விலங்குகள் வருவதை தடுப்பதற்கு அமைக்கப்பட்டிருந்த மின்சார வலையில் சிக்கி மின்சாரம் தாக்கி இருவரும் உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு அவர்களது குடும்பத்தினருக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தர விட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.



கோவை தெற்கு மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் சார்பில் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பள்ளி மாணவர்களுக்கான கவிதை ஒப்புவிக்கும் போட்டி நடைபெற்றது. இந்தப் போட்டியில் ஆதிதிராவிடர் நலக்குழு மாநில இணைச்செயலாளர் திப்பம்பட்டி ஆறுச்சாமி சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன், கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை துணைச் செயலாளர் மீனாட்சி ஜெயக்குமார், கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை நிர்வாகிகளான பட்டீஸ்வரன், சதீஷ், மோகன், குமார், பொதுப்பணி பரமசிவம், மாநில நெசவாளர் அணி செயலாளர் கே.நாகராஜன், ஒன்றிய செயலாளர் ஐயம்பாளையம் ராசு, பொதுக்குழு உறுப்பினர் ரகு மற்றும் ஆனைமலை சாந்தலிங்கம் உள்பட பல நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

கரூர் தொகுதி மத்திய, மாநகர கழக

# பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் !

*கரூர், அக்.31-*

*கரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மத்திய, மாநகர கிழக்கு பகுதி பாக முகவர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் கரூர் கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்றது.*

*மத்திய மாநகரக் கிழக்கு பகுதி செயலாளர் ஆர்.எஸ். ராஜா தலைமை வகித்தார். கரூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளர் தினகரன் பங்கேற்று வாக்குச் சாவடி முகவர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.*

*மத்திய மாநகர கிழக்கு பகுதிக்கு உட்பட்ட பாலம்மாள்புரம், வ.உ.சி.நகர், பசுபதி பாளையம், கொளந்தா கவுண்டனூர் பகுதிகளை சேர்ந்த வாக்குச்சாவடி முகவர்கள் கலந்து கொண்டனர்.*

*முன்னதாக நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் மகேஸ்வரி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சக்திவேல், மாவட்ட பிரதிநிதி குமார், மாமன்ற உறுப்பினர்கள் அருள்மணி நந்தினி, வார்டு செயலாளர்கள் லாரன்ஸ், மதியழகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.*



புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில், மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தமிழ்நாடு மாநில ஊரக/நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் இணைந்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, சிறப்பு தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் மற்றும் இளைஞர் திறன் திருவிழாவினை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 28.10.2023 அன்று துவக்கி வைத்து, முகாமில் பங்கேற்று தேர்வு செய்யப்பட்டுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) மு.சந்திரன், ஆலங்குடி பேரூராட்சித் தலைவர் திருமதி.மு.ராசி முருகானந்தம், திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.வள்ளியம்மை தங்கமணி, முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் த.சந்திரசேகரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



நாகை மாவட்டம் திருக்குவளை அண்ணா பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி வழங்கினார். உடன் கீழ்வேளூர் சட்ட மன்ற உறுப்பினர் நாகைமாலி, அண்ணா பல்கலைக் கழக துணை வேந்தர் ரா.வேல்ராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் பேபி, திருக்குவளை பொறியியல் கல்லூரி முதல்வர் இளங்கோவன் மற்றும் பலர் உள்ளனர்.



நாகை மாவட்டத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் சார்பாக 120 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா நடைபெற்றது. விழாவில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி சீர்வரிசைப் பொருட்களை வழங்கினார். உடன் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன், தாட்கோ தலைவர் உ.மதிவாணன், மாவட்ட வருவாய் அலுவலர் பேபி, கீழ்வேளூர் சட்ட மன்ற உறுப்பினர் நாகைமாலி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் உமாமகேஸ்வரிசங்கர் மற்றும் பலர் உள்ளனர்.

### திருக்குவளை பொறியியல் கல்லூரியில்

# 333 மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை அமைச்சர் க.பொன்முடி வழங்கினார்!

## என்.கௌதமன் – உ.மதிவாணன் பங்கேற்பு!

நாகை, அக். 31 -

நாகை மாவட்டம் திருக்குவளையில் உள்ள அண்ணா பொறியியல் கல்லூரியில் திருக்குவளை, அரியலூர், பட்டுக்கோட்டை ஆகிய பொறியியல் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு 2022ம் ஆண்டுக்கான பட்டம் வழங்கும் விழா நடைபெற்றது.

விழாவிற்கு உயர்கல்வித்துறை அமைச்சரும், அண்ணா பல்கலைக் கழக இணை வேந்தருமான முனைவர் க.பொன்முடி தலைமை தாங்கி 333 மாணவ , மாணவிகளுக்கு பட்டம் மற்றும் பதக்கங்களை வழங்கி பேசுகையில் திருக்குவளை, அரியலூர், பட்டுக்கோட்டை ஆகிய அண்ணா பல்கலை கழக உறுப்பு கல்லூரிகளில் பட்டம் பெற்றவர்களுக்கு பட்டம் வழங்கும் விழா இந்த ஆண்டு கலைஞரின் 100 வது பிறந்த நாள் ஆண்டு. கலைஞர் இல்லை என்றால் திருக்குவளை இல்லை, திருக்குவளை இல்லை என்றால் கலைஞர் இல்லை, கலைஞர் இல்லை என்றால் திருக்குவளையில் இந்த பொறியியல் கல்லூரியே இல்லை. திருக்குவளை மட்டும் இல்லை பட்டம் பெற வந்துள்ள அரியலூர், பட்டுக்கோட்டையிலும் பொறியியல் கல்லூரி இல்லை.

இந்த திருக்குவளை பொறியியல் கல்லூரி தொடங்கப்பட்ட 2008 ஆம் ஆண்டிற்கு பிறகு 17 ஆண்டுகளுக்கு பின்னர் முதல் பட்டம் அளிக்கும் விழா. தமிழர்களை வளர்த்த ஊர் திருக்குவளை அரசியலுக்கு அப்பாற்பட்டு இன்று நாம் தமிழர்கள் என்ற உணர்வோடு வாழ்ந்து கொண்டு இருக்க வழி காட்டியாக இருந்தவர் கலைஞர். பட்டம் பெற்ற மாணவர்கள் வேலை தேடுபவர்களாக இருக்க கூடாது, வேலை கொடுப்பவர்களாக இருக்க வேண்டும்.

தமிழக முதல்வர் தளபதி அவர்கள் நான் முதல்வன் திட்டதை அறிவித்துள்ளார். மாணவர்களுக்கு தொழில் நிறுவனங்களுடன், அயல்நாட்டு தொழில்சாலைகளைகளோடும் உறவு வைத்து கொண்டு பொறியியல் படிக்கும் போதே வேலை வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும் , முதல்வர் தளபதி அவர்கள் நான் முதல்வன் திட்டத்தை அறிவித்த பிறகு தான் கல்லூரியில் புதிய பாடத் திட்டங்கள், குறிப்பாக பொறியியலில் வளர்ச்சி ஒவ்வொரு காலத்திற்கு ஏற்ப வளரவேண்டும். நாங்கள் படிக்கும் போது சிவில், மெக்கானிக்கல் இரண்டு பாடம் தான் இருக்கும். இப்போது எத்தனையோ பாடதிட்டங்கள் என்றால் இது காலத்தின் வளர்ச்சி, அறிவியியல் வளர்ச்சி ஏற்பட்டு இருக்கிறது. அறிவியல் திட்டத்திற்கு ஏற்ப பாட திட்டங்கள் வளர வேண்டும். நாங்கள் எல்லாம் படிக்கும் போது போனே கிடையாது. இப்போது எல்லா மாணவர்களிடம் போன் உள்ளது. இது அறிவியல் வளர்ச்சி, கால மாற்றம் அப்படிதான் இருக்க வேண்டும்.

காலத்திற்கு ஏற்ப எல்லாம் மாற வேண்டும், கால திட்டங்களும் மாறவேண்டும். நான் அப்படித்ததையே படிப்பேன் என்று சொல்லக் கூடாது. புதிய பாட திட்டங்களை படிக்க வேண்டும். நம்முடைய அறிவையும் வளர்த்து கொள்ள வேண்டும். நாங்கள் படிக்கும் போது இருந்த நிலைவேறு, கலைஞர் திருக்குவளையில் படித்து திருவாரூரில் 6ம் வகுப்புக்கு சேர்க்கை கேட்கும் போது அந்த பள்ளியில் இடம் கிடையாது என்றனர்.

அப்போது என்னை இங்கு சேர்க்க வேண்டும் இல்லை என்றால் நான் குளத்தில் விழுந்துடுவேன் என்று மிரட்டினார். உடனே கலைஞரை கூப்பிட்டு 6ம் வகுப்பில் சேர்த்து கொண்டனர். இதுதான் கலைஞரின் போராட்ட குணம். திருவாரூர் கமலாய குளத்தில் கலைஞரும், கலைஞரின் நண்பர் தென்னனும் நீச்சல் அடித்த போது நண்பருக்கு நீந்த முடியவில்லை. அப்போது கலைஞரை பார்த்து அவரது நண்பர் நீந்த முடியவில்லைதிரும்பிபோவோம் என்றுள்ளார். அப்போது கலைஞர் நாம் இப்போது பாதி குளத்தில் உள்ளோம். திரும்பி போனாலும், நாம் இலக்கை எட்டும் அளவும் ஒரே தூரம் அதனால் நாம் இலக்கை நோக்கி நீந்துவோம் என்றார் இது தான் கலைஞர். ஒரு காலத்தில் பெண்கள் படிக்க மாட்டார். இப்போது பெண்கள் அதிகம் படிக்கிறார்கள். பொறியியல் கல்லூரியில் பெண்கள் சேர மாட்டார்கள். இப்போது பொறியியல் படிப்பில் பெண்கள் அதிகம் சேர்ந்துள்ளனர். இது தான் திராவிட மாடல் அரசு. பெண்களுக்கும், ஆண்களுக்கும் சம உரிமை வேண்டும். முதல்வர் தளபதி அவர்கள் நான் முதல்வன் திட்டத்திற்கு பின் இப்போது புதுமை பெண் திட்டம் கொண்டு வந்துள்ளார். புலிக்கு பிறந்தது பூனையாக இருக்குமா என்பது போல கலைஞருக்கு பிறந்த தளபதி சும்மாவா இருப்பார்.

பெண்கள் எல்லாம் படிக்க வேண்டும் என்ற புதுமை பெண் திட்டத்தை கொண்டு வந்து அரசு பள்ளியில் படித்த மாணவ, மாணவிகளுக்கு 7.5 சதவித இட ஒதுக்கிடு வழங்கியும், பெண்களுக்கு மாதம் ரூ 1,000 வாங்கி வருகிறார். இந்த ஆட்சியே பெண்களுக்கான ஆட்சியாக உள்ளது.

பெண்களுக்கு சம உரிமை கொண்டு வர வேண்டும் என்பது தான் தளபதியின் குறிக்கோள். .பொறியியல் பாடத்தில் தமிழ் பாட வழி என்பது இல்லாமல் இருந்து. தமிழ் பாட வழியில் சிவில் மற்றும் மெக்கானிக் இன்ஜினியரிங் பாடத்தை 2008ம் ஆண்டிலேயே தமிழ் வழியிலேயே கொண்டு வந்தது கலைஞர் தான். கல்லூரியில் தமிழ் வழியிலேயே படிக்கலாம் என்று கொண்டு வந்தவர் பேரறிஞர் அண்ணா, கலைஞர் அறிவியல் மற்றும் கலை பாடங்களிலும் படிக்காலம் என்று கொண்டு வந்தார்.

அது மட்டும் அல்ல தமிழ் பாட வழியில் படிப்பவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படும் என்று சொல்லி வழங்கியவர் கலைஞர். கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் பொது தேர்விலும் கலந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் வரவேண்டும். .ஐ.எ.எஸ்., ஐ.பி.எஸ்., படிக்க வேண்டும் எனற எண்ணத்தை வளர்த்து கொள்ள வேண்டும். தமிழக முதல்வர் தளபதி அவர்கள் ஐ.ஏ.எஸ். போன்ற முதல்நிலை தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு ரூ.25,000மும், முதல் நிலை எழுதுபவர்களுக்கும் மாதம் 7,000 வழங்குவது நம் முதல்வர் அவர்கள் தான். நாம் பொது அறிவை வளர்த்து கொள்ள வேண்டும். கலைஞர் அவர்கள் திருக்குவளைக்கு பொறியியல் கல்லூரி கொண்டு வந்தார்கள். கல்லூரிக்கு இடம் இல்லை என்ற போது திருக்குவளை அஞ்சுகம், முத்துவேலர் அரசுமேல் நிலைப் பள்ளில் கல்லூரியை தொடங்கி இங்கு கட்டம் கட்ட ரூ. 18 கோடி நிதி ஒதுக்கி கட்டிடம் கட்டி கொடுத்தவர் கலைஞர் தான். 12ம் வகுப்பு மதிப் பெண்ணை வைத்து தான் பொறியியல், மருத்துவம் படிப்பு என்று இருந்தது. அப்படி இருந்தால் தான் 12ம் வகுப்பு மாணவர்கள் நன்றாக படிப்பார்கள். இப்போது நீட் தேர்வு என்பதால் அதற்காக கோச்சிங் சென்டருக்கு சென்று அங்கு ரூ.5 லட்சம் வரை செலவு செய்து வருகின்றனர்.

இது தேவை இல்லை என்பதற்காக தான் தமிழக முதல்வர் அவர்கள், விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சராக உள்ள உதயநிதிஸ்டாலின் அவர்களும் ,எல்லா கட்சியினரும், கட்சி சார்பில்லாமல் நீட் தேர்வு வேண்டாம் என்கிறார்கள். வரும் காலத்தில் கல்லூரி படிப்புக்கு நுழைவு தேர்வு வரும். மேலும் 3ம் வகுப்பு, 5ம் வகுப்பு, 8ம் வகுப்புக்கு நுழைவு தேர்வு வரும். பி.ஏ., பி.எஸ். பி.,க்கும் நுழைவு வரும். இது வேண்டுமா என்பது தான் கேள்வி.

தற்போது இரு மொழி கொள்கைக்கே ஆபத்து வந்துள்ளது. அண்ணா அவர்கள் இரு மொழி கொள்கையே போதும் என்று அண்ணா அவர்கள் ஒரு கதை சொன்னார்கள் ஒரு வீட்டில் அதன் உரிமையாளர் சுவற்றில் பெரிய ஓட்டை போட்டுள்ளான். அப்போது ஏன் சுவற்றில் ஓட்டை என்று பக்கத்து வீட்டுக்காரர் கேட்டுள்ளார்கள். அதற்கு அந்த வீட்டு காரர் எங்கள் வீட்டில் பூனை உள்ளது.

அந்த பூனை செல்லுவதற்காக என்றார். அடுத்து முறை பார்த்த போது அந்த வீட்டிற்கு செல்லும் போது சின்ன ஓட்டை இருந்துள்ளது. அதை கேட்டப்போது இது பூனையின் குட்டி போக என்றான். பூனை போகும் வழியில் குட்டி போகாதா என்றார். நமக்கு இண்டர் நேசனல் மொழி ஆங்கிலம் உள்ளது நமக்கு இருவழி மொழி கொள்கையே போதும் என்றார் அண்ணா. கலைஞர் பிறந்த ஊரில் படிக்கும் மாணவர்கள் நன்றாக படிக்க வேண்டும். தமிழக முதல்வர் தளபதி அவர்கள் சொல்லு வார்கள் மாணவர்களாகிய நீங்கள் வேலைதேடுபவர்களாக இல்லாமல் வேலை வழங்குபவராக இருக்க வேண்டும்.

இவ்வாறு உயர்கல்வி துறை அமைச்சர் க.பொன்முடி பேசினார். அண்ணா பல்கலைக் கழக துணை வேந்தர் ரா.வேல்ராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் பேபி, கீழ்வேளூர் சட்ட மன்ற உறுப்பினர் நாகைமாலி, மீன் வளர்ச்சிக் கழக தலைவர் என்.கௌதமன், தாட்கோ தலைவர் மதிவாணன், தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் இல.மேகநாதன், கீழையூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் சோ.பா.மலர்வண்ணன், பொதுக்குழு உறுப்பினர்கள் இல.பழனியப்பன், சிவக்குமார், மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் பி.தியாகராஜன், செல்வா உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டை மாவட்டத்தில் புதிய பகுதிநேர அங்காடி!

## அமைச்சர் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் திறந்து வைத்தனர்!

புதுக்கோட்டை, அக். 31 -

புதுக்கோட்டை மாவட்டம் ஒன்றியம், 9ஏ நத்தம் பண்ணை ஊராட்சி, அபிராமி நகரில், கூட்டுறவுத் துறையின் சார்பில், புதிய பகுதிநேர அங்காடியினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 25.10.2023 அன்று திறந்து வைத்து, குடும்ப அட்டைதாரர்களுக்கு உணவுப் பொருட்களை வழங்கினார். இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா.மெர்சி ரம்யா தலைமையில் நடைபெற்றது.

பின்னர் சட்டம், அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள் பொதுமக்களின் நலனிற்காக எண்ணற்றத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் கூட்டுறவுத் துறையின் மூலம் பொது மக்களுக்குத் தேவையான உணவுப் பொருட்கள் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அதன்படி இன்றையதினம், அபிராமி நகரில், புதிய பகுதிநேர அங்காடி திறந்து வைக்கப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை கட்டுப்பாட்டில் உள்ள அர்பன் 19 அங்காடியிலிருந்து பிரிக்கப்பட்டுள்ள அபிராமி நகர் பகுதி நேர நியாய விலைக் கடையானது 185 குடும்ப அட்டைகளுடன் பிரதி வாரம் சனிக்கிழமை மட்டும் இயங்கும் வகையில் அபிராமி நகர் மக்களுக்காக பிரத்யேகமாக திறக்கப்பட் டுள்ளது. இப்பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக்கடை திறப்பதி னால் குடும்ப அட்டைதாரர்களுக்கு வெகு தூரம் சென்று பொருட்களை பெற்று வரும் நிலையில், குடும்ப அட்டைதாரர்களின் நேரமும், அலைச்சலும் குறையும். தாய் அங்காடியான அர்பன் 19 அங்காடியிலிருந்து அபிராமி நகர் சுமார் 2 கி.மீ தூரம் உள்ளதாலும், மழைக் காலங்களில் பொது மக்கள் தங்களது அத்தியாவசியப் பொருட்களைப் பெறுவதற்கு மிகவும் சிரமமாக இருந்து வந்த நிலையில் இனி அபிராமி நகர் மக்கள் தங்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை தங்கள் பகுதியிலேயே பெற்றுகொள்ளும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. எனவே இப்பகுதி பொதுமக்கள் அனைவரும் இதனை உரிய முறையில் பெற்று பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் புதுக்கோட்டை சட்ட மன்ற உறுப்பினர் மருத்துவர் வை.முத்துராஜா , மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் த.ஜெயலட்சுமி, புதுக் கோட்டை நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் கோ.இராஜேந்திர பிரசாத், நகர்மன்றத் துணைத் தலைவர் எம்.லியாகத் அலி, மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் மு.க.ராமகிருஷ்ணன், துணைப் பதிவாளர் அப்துல்சலீம், கூட்டுறவு சார்பதிவாளர்கள் இந்திரா, நிஷாந்தி, அர்பன் மேலாளர் கிருஷ்ணகுமார், நகர்மன்ற உறுப்பினர்கள் பால்ராஜ், அடைக்கலம் மற்றும் குளவாய்ப்பட்டி சி.சண்முகம், பா.ரெங்கராஜ், எஸ்.வி.ஆர். ஸ்டாலின் ராஜா, கி.சுப்பிரமணியன், முரளிதரன், ஆர்ட்டிஸ்ட் ஆறுமுகம், நாகராஜன், பாலு, ஆரோக்கியசாமி, வடவாளம் க.செ.மணிமாறன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் பசும் பொன் முத்துராமலிங்க தேவரின் 116 வது பிறந்ததினத்தையொட்டி செவ்வாய்ப்பேட்டையில் உள்ள முத்துராமலிங்க தேவரின் சிலைக்கு மாவட்டக் கழகச் செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் உடன் மாநகரச் செயலாளர் பா.ரகுபதி. மாவட்ட துணைச்செயலாளர். மஞ்சுளா, பகுதி செயலாளர் சி.பிரகாஷ்.கோட்டச் செயலாளர்கள் கண்ணன். சரவணன் சங்கர். சையத் இப்ராகீம் விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் செவ்வை அன்புக்கரசு, மாமன்ற உறுப்பினர் அம்சா ரமேஷ். மாநகர மகளிர் அணி அமைப்பாளர். பாலாமணி சேகர் உட்பட கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குன்றத்தூர் தி.ந. சம்பந்தம்

### அக்டோபர் 31 (1977)



செங்கற்பட்டு மாவட்டக் கழகச் செயலாளராகப் பொறுப்பேற்று பணியாற்றியவர்.

கழகம் நடத்திய பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரது அன்பை பெற்றவர்.

இறுதிமூச்சுவரை கழகப் பணியாற்றிய பகுத்தறிவுப் பண்பாளர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் ஆலோசனைப்படி கிழக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் பெத்தநாயக்கன்பாளையம் பேரூராட்சியில் மாபெரும் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. இதில் வெற்றி அணிக்கு பரிசையும் கோப்பையும் மாவட்ட கழகப் பொருளாளர் ஆர்.வி.ஸ்ரீராம் வழங்கினார். நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் அன்பு ( எ) மருதமுத்து, பேரூர் செயலாளர் வெங்கடேசன், பேரூராட்சி மன்றத் தலைவர் பழனியம்மாள் ராஜாமணி, பொதுக்குழு உறுப்பினர் ஏ.எம்.மனோகரன், முத்துலிங்கம், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ரமேஷ், துணை அமைப்பாளர்கள் ஆவின் செல்வமணி, முனைவர்.தங்க பாண்டியன், லட்சுமண பெருமாள், மதியழகன், ரமேஷ் பாபு, கிருஷ்ணகுமார், விஜயகுமார், மாவட்டப் பிரதிநிதி தனபால், மகேஷ் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# சீர்காழி நகரக் கழக முன்னாள் செயலாளர் கோ.சம்பத் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

நாகை, அக். 31 -

மயிலாடுதுறை மாவட்ட சீர்காழி நகரக் கழகச் முன்னாள் செயலாளரும், சீர்காழி நகர்மன்ற முன்னாள் தலைவருமான கோ.சம்பத் (வயது 82) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த சம்பத் எம்.ஜி.ஆர். ஆட்சியின் போது கலைஞரை சீர்காழி நகராட்சிக்கு அழைத்து வந்தார், அப்போது கலைஞர் ஈரோட்டிற்கு ஒரு சம்பத், சீர்காழிக்கு ஒரு சம்பத் என்று கலைஞரால் பாராட்டப்பட்டவர் மறைந்த சம்பத்திற்கு மகள் மங்கை உள்ளார்.

கோயமுத்தூரில் இறந்த சம்பத்திற்கு கழகத்தினர் ஏராளமானவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.



புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி பட்டுக்கோட்டை சாலையில், கே.வி.எஸ். திருமண மஹாலில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ், நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் 28.10.2023 அன்று குத்துவிளக்கேற்றி பங்கேற்று, கர்ப்பிணிப் பெண்களுக்கு சீர்வரிசைகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.டி.ராமச்சந்திரன், அறந்தாங்கி நகர்மன்றத் தலைவர் ஆனந்த், அறந்தாங்கி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.மகேஸ்வரி சண்முகநாதன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் உதயம் சண்முகம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட அலுவலர் திருமதி.புவனேஸ்வரி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி வட்டம் அரச்சலூர் தலவமலை பகுதியில் நடமாடும் சிறுத்தையை கூண்டு வைத்து பிடிப்பதற்காக அட்ட வணை அனும்மன்பள்ளி பகுதியில் வனத்துறையின் மூலம் கூண்டுகள் வைத்திருப்பதை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜகோபால் சுன்கரா, மாவட்ட வன அலுவலர் சுதாகர் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# நாகையில் 120 கர்ப்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா!

## எஸ்.ரகுபதி தொடங்கி வைத்தார்! என்.கௌதமன் - உ.மதிவாணன் பங்கேற்பு!

நாகை, அக். 31-

நாகை மாவட்டத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் சார்பாக 120 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு மாவட்ட வருவாய் அலுவலர் பேபி தலைமை தாங்கினார். நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என். கௌதமன், தாட்கோ தலைவர் உ.மதிவாணன், கீழ்வேளூர் சட்ட மன்ற உறுப்பினர் நாகைமாலி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் ஷமளா வரவேற்றார்.

விழாவில் 120 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி கலந்து கொண்டு சீர்வரிசைப் பொருட்களை வழங்கி பேசுகையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மூலம் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம், பெண்கள் மற்றும் குழந்தைகளின் நலனை மேம்படுத்தும் ஒரு சிறப்பான திட்டமாகும்.

இத்திட்டத்தின் மூலம் நாகை மாவட்டம் முழுவதும் 6 வயதிற்குட்பட்ட 24,839 குழந்தைகளும், 2856 கர்ப்பிணி பெண்கள், 2262 பாலுட்டும் தாய்மார்கள் என மொத்தம் 29,954 பயனாளிகள் பயன்பெருகிறார்கள். பிறப்பு முதல் 6 மாத குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் வளரினம் பெண்களுக்கு ஊட்டச்சத்து வழங்குதல், ஆரம்ப கால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வி, ஊட்டச்சத்து மற்றும் சுகாதார கல்வி ஆகிய சேவைகளை வழங்கி வருகிறது.

சுகாதார துறையின் மூலம் தடுப்பூசி போடுதல், சுகாதார பரிசோதனை மற்றும் மருத்துவ பரிந்துரை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத் திட்டங்கள் பயன்படுத்தவருமான வரம்பு ஏதுமில்லை. தகுதியுடைய அனைவரும் தங்கள் இல்லத்திற்கு அருகில் உள்ள குழந்தைகள் மையத்தில் பதிவு செய்து பயன் பெறலாம். பிறப்பு முதல 6 வயதுக்குட்பட்ட குழந்கைளின் ஆரோக்கியமான வளர்ச்சியை உறுதி செய்யும் நோக்கில் ஊட்டச்சத்து குறைபாடு இல்லாத தமிழ்நாடு என்ற நிலையை அடைய 7.5.2023 அன்று ஊட்டச்சத்து உறுதி செய் என்ற திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் நீலகிரி மாவட்டத்தில் தொடங்கி வைத்தார்.

நாகை மாவட்டத்தில் 31,713 குழந்தைகளின் உயரம் மற்றும் எடை அளக்கப்பட்டு ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகள் கண்டறியப்பட்டனர். ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தைகளை அரசு சிறப்பு மருத்துவர்கள் மூலம் பரிசோதனை செய்யப்பட்டது. இதில் 12,666 குழந்தைகளுக்கு சிறப்பு சிகிச்சை வழங்கப்பட்டது.

பிறப்பு முதல் 6 மாதம் வரை கடுமையான ஊட்டச்சத்து குறைபா டுள்ள 176 குழந்தைகள் மற்றும் மிதமான ஊட்டச்சத்து குறைபாடுள்ள 226 குழந்தைகளில் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து மாவு , பேரிச்சம்பழம், ஆவின் நெய், புரோட்டின் பிஸ்கட், இரும்புச்சத்து திரவம் மற்றும் குடற்பூச்சி நீக்க மாத்திரை அடங்கிய ஊட்டச்சத்து பெட்டகங்கள் முறையே 2 மற்றும் 1 தாய்பாலின் தரம் மற்றும் ஊட்டச்சத்து நிலையினை மேம்படுத்த வழங்கப் பட்டுள்ளது. கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுள்ள 6 மாதம் முதல் 6 வயது வரையிலான 1605 குழந்தைகளுக்கு பிறப்பு உணவு வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் பயன்களை மக்கள் நன்கு தெரிந்துக் கொண்டு அருகில் உள்ள குழந்தை மையங்கள் மூலமாக அமைத்து சேவைகளையும் பயன்படுத்தி கொள்ள வேண்டும். இன்று சமுதாய வளைகாப்பு விழாவில் கலந்து கொண்ட 120 கர்ப்பிணி பெண்களுக்கு வாழ்த்துகளை தமிழ்நாடு முதல்வர் தளபதி சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பேசினார்.

விழாவில் மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மகா.குமார், சிக்கல் என். ஆனந்த், செல்வ.செங்குட்டுவன், நகரக் கழகச் செயலாளர்கள் இரா.மாரிமுத்து, எம்.ஆர்.செந்தில் குமார், ஒன்றியக் குழு தலைவர் வே.அனுசியா, மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் ஆர். ஏ.டி.அண்ணாதுரை, எஸ். பால்ராஜ், எஸ்.கே. ஜி.ஏ.சேகர், நாகை நகரக் கழக நிர்வாகிகள் வெற்றிலைகடைசிவா, பி.திலகர், அபுபக்கர் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

தேர்தல் வாக்குறுதியில் சொல்லாத - சில

# முத்தான திட்டங்களையும் கழக அரசு செயல்படுத்தி வருகிறது!

## நாமகிரிப்பேட்டையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் பேச்சு!

நாமக்கல், அக். 31 -

நாமக்கல் கிழக்கு மாவட்டம் நாமகிரிப்பேட்டை பேரூர் திமுக கழகத்தின் சார்பில் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா ஒட்டி புதிய கழகக் கொடியேற்று விழா, மாநிலம் முழுவதும் மகளிர் உரிமைத் தொகை வழங்கிய முதல்வருக்கு நன்றி தெரிவிக்கும் விழா மற்றும் கழக அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க மாபெரும் முப்பெரும் விழா என பொதுக்கூட்டம் நாமகிரிப்பேட்டை பேருந்து நிலையம் அருகே நடைபெற்றது.



நாமகிரிப்பேட்டை ஒன்றிய கழக செயலாளர் கே.பி.இராமசுவாமி தலைமை தாங்கினார். நாமகிரிப்பேட்டை பேரூர் கழக செயலாளர் கே.அன்பழகன் வரவேற்புரை ஆற்றினார்.

கூட்டத்தில் அவைத் தலைவர் அய்யாக்கண்ணு, மாவட்ட பிரதிநிதி அருள், பேரூர் துணை செயலாளர் கோடீஸ்வரன், ஜெயசுதா, தமிழழகன், இளங்கோ, பாபு, ஒன்றிய பிரதிநிதிகள் கதிரேசன், முருகேசன், செந்தில், ராமலிங்கம், சேகர், வார்டு செயலாளர்கள் விஜய், மகாலிங்கம், செல்வம், மணிவண்ணன், அன்பு மோகனசுந்தரம், , சேகர், , சுந்தரவேலு ரத்தினம், முருகன், கோவிந்தன், செந்தில் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் கலந்துகொண்ட நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு நாமக்கல் கலைஞர் நூற்றாண்டு விழாவை ஒட்டி 61 அடி உயரம் புதியதாக அமைக்கப்பட்ட கொடிக் கம்பத்தினை திறந்து வைத்தும், அதில் கழகத்தின் இரு வண்ணக் கொடியினை ஏற்றி வைத்தார்.

பொதுக் கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார் பேசும் போது தேர்தல் வாக்குறுதியில் அறிவித்த அனைத்து திட்டங்களும் முழுமையாக நிறை வேற்றப்பட்டுள்ளதாகவும் பட்டியலிட்டார். பெண்களுக்கு இலவச பேருந்து பயணம், கொரோனா காலத்தில் ரூ. 4 ஆயிரம் வழங்கியது, மகளிர் சுய உதவி குழுக்கள் வாங்கிய கடன் தள்ளுபடி, ஐந்து பவுன் கடன் தள்ளுபடி என தேர்தல் வாக்குறுதிகளை அறிவித்தபடி அனைத்து வாக்குறுதிகளும் நிறை வேற்றப்பட்டுள்ளது.

தேர்தல் வாக்குறுதி சொல்லாத திட்டங்களான ஆன முத்தான திட்டமான 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை அரசு பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு காலை உணவு திட்டம், அரசு பள்ளியில் படித்து கல்லூரிக்கு சேரும் பெண்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டம், மகளிருக்கு உரிமை தொகை என பல திட்டங்களை செயல்படுத்தப்பட்டு வருகிறது என்று குறிப்பிட்டார்.



மைலத்தில்நடைபெற்ற விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை சார்பில்முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பள்ளி மாணவர் மாணவியருக்கான கவிதைகள் திரைப்பட வசனங்கள் ஒப்புவித்தல் போட்டியை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறைஅமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்துபோட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார். உடன்மாநில பகுத்தறிவு பேரவை செயலாளர் இறையன்பன் குத்தூஸ்,பேரவை துணைச் செயலாளர் நன்மாறன்உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

ஆந்திர மாநிலம் - விஜய நகரத்தில் இரயில்கள் மோதி விபத்து:

# இரயில்வே பாதுகாப்பு முறைகளை மீளாய்வு செய்திடுக!

## இரங்கல் செய்தியில் ஒன்றிய அரசுக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**மதுரை,அக்.31 -**

**ஆந்திர மாநிலம் - விஜயநகரில் நிகழ்ந்த இரயில் விபத்துக்கு இரங்கல் தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவாகள் விடுத்துள்ள செய்தி வருமாறு:**

ஆந்திர மாநிலம் விஜயநகரத்தில் இரயில்கள் மோதி நிகழ்ந்த விபத்து குறித்து அறிந்து மிகுந்த மனவேதனை அடைந்தேன். 2023 ஜூன் மாதம் பாலசோர் இரயில் விபத்து ஏற்பட்டு, சில மாதங்களே ஆன நிலையில் மீண்டும் இத்தகைய விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை எண்ணி மனமிரங்குகிறேன். காயமடைந்தவர்கள் விரைவில் நலம் பெற விழைகிறேன்.

பெருவாரியான இந்தியர்கள் தங்களின் பயணத்திற்காக இரயில்களையே சார்ந்திருக்கும் சூழலில் குறுகிய கால இடைவெளியில் விபத்துகள் தொடர்கதையாவது மிகுந்த கவலையளிக்கிறது. இரயில்வே பாதுகாப்பு முறைகளை உடனடியாக ஒன்றிய அரசு மீளாய்வு செய்து, மேம்படுத்திப் பயணிகளின் நம்பிக்கையைக் காப்பாற்ற வேண்டும், அவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அச்செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

ஏழை, எளிய பெண்களின் முன்னேற்றத்திற்காக

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பல்வேறு நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்!

## அறந்தாங்கியில் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேச்சு!

புதுக்கோட்டை, அக். 31 -

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி பட்டுக்கோட்டை சாலையில், கே.வி.எஸ். திருமண மஹாலில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ், நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 28.10.2023 அன்று குத்துவிளக்கேற்றி பங்கேற்று, கர்ப்பிணிப் பெண்களுக்கு சீர்வரிசைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா.மெர்சி ரம்யா தலைமையில் நடைபெற்றது.

பின்னர் அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பெண்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ், சமுதாய வளைகாப்பு விழா இன்றையதினம் நடத்தப்பட்டது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் போஷான் அபியான் திட்டத்தில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், ஜன் அன்தோலன் (Jan Andolan) செயல்பாடுகள் தேசிய ஊட்டச்சத்து மாதமான செப்டம்பர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் கர்ப்பிணிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சமுதாய வளைகாப்பு விழா நடத்திட வட்டாரத்திற்கு ரூ.25,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் மாவட்ட அளவிலான சமுதாய வளைகாப்பு விழா 300 கர்ப்பிணி பெண்களுக்கும், கந்தர்வக்கோட்டை வட்டாரத்தில் 100 கர்ப்பிணி பெண்களுக்கும் நடத்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக அறந்தாங்கியில் 300 கர்ப்பிணி பெண்களுக்கு நடைபெற்றது. கர்ப்பிணி பெண்கள் தமிழக அரசின் நலப் பயன்களை பெற்று பயனடையும் வகையில், ஊட்டச்சத்துமிக்க உணவுகளை உட்கொண்டு ஆரோக்கியமான குழந்தைகளை பெற்று வளர்க்க வேண்டும். மேலும் கர்ப்பிணிகளுக்கு வளையல், மஞ்சள், குங்குமம், பூ, கையேடு, பழங்கள் அடங்கிய பரிசுத் தட்டுகளும் வழங்கப்பட்டன.



இந்நிகழ்ச்சியில், அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.டி.ராமச்சந்திரன் , அறந்தாங்கி நகர்மன்றத் தலைவர் ஆனந்த், அறந்தாங்கி ஒன்றியக்குழுத் தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் உதயம் சண்முகம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட அலுவலர் புவனேஸ்வரி, ஒன்றிய குழு உறுப்பினர் சக்தி ராமசாமி, குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் வசந்தி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.




தமிழ்நாடு சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் ,சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன் ஆகியோர் ஜப்பான் நாட்டில் உள்ள (HIROSHIMA PEACE PARK) ஹீரோஷிமா அமைதி பூங்காவில் நிறுவப்பட்டுள்ள மகாத்மா காந்தி சிலைக்கு பூங்கொத்து வைத்து மரியாதை செலுத்தினர்.

தாம்பரம் மாநகர திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில்

# மாநகர பிரதிநிதிகள் கூட்டம்!

## மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை!



தாம்பரம் மாநகரக் கழகத்தின் சார்பில் மாநகர பிரதிநிதிகள் கூட்டம் நாளை (01.11.2023) மாலை 4 மணி அளவில் மேற்கு தாம்பரம் கோண் கிருஷ்ணா திருமண மண்டபத்தில் மாநகர அவை தலைவர் துணை மேயர் கோ.காமராஜ் தலைமையிலும் மாநகர துணைச் செயலாளர்கள் மேயர் க.வசந்தகுமாரி இரா.நரேஷ் கண்ணா.எம்.சி பி.சதாசிவம் மற்றும் மாநகர பொருளாளர் ஏ.விஜயரங்கன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில் மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. மேலும் மாநகரத்துக்கு உட்பட்ட மாவட்ட, மாநகர, பகுதி, வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, மாநகர, இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, மாவட்ட, மாநகர, அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:** 1.வருகின்ற 5 ந்தேதி ஞாயிற்றுக்கிழமை திருவள்ளூரில் நடைபெறுகின்ற பாகநிலை முகவர்கள் (BLA2) கூட்டம்

2.வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு வாக்காளர் சேர்ப்பு நீக்கல் முகாம்களில் கழக பாக நிலை முகவர்களின் களப்பணி குறித்து

3.கழக வளர்ச்சிப் பணி

**எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ.**
செயலாளர்
தாம்பரம் மாநகர தி.மு.க.

# தஞ்சை வடக்கு மாவட்ட கழக செயலாளர் சு.கல்யாணசுந்தரம் M.P. அவர்களின் அறிவிப்பு



**தஞ்சை வடக்கு மாவட்டம் - 2024 நாடாளுமன்ற தேர்தல் பணி மற்றும் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் குழு**

கழக தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அறிவுறுத்தலின்படி தஞ்சை வடக்கு மாவட்டத்தில் உள்ள திருவிடைமருதூர், கும்பகோணம், பாபநாசம் ஆகிய சட்டமன்ற தொகுதிகள் வாரியாக நியமிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி முகவர்கள், பூத்கமிட்டி உறுப்பினர்கள், ஆகியோர்களை கண்காணிப்பதற்கும், நேரில் சந்தித்து வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும்பணியை மேற்கொள்வதற்கும், அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர், பகுதி கழக செயலாளர்கள் தலைமையில் தொகுதி பார்வையாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாநகர செயலாளர் முன்னிலையில் மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள் கீழ்க்கண்ட பட்டியல்படி ஒன்றிய, நகர, பேரூர், பகுதி கழகத்திற்கு கண்காணிப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

**தொகுதி பார்வையாளர்கள்**

| 170-திருவிடைமருதூர் தொகுதி | 171-கும்பகோணம் தொகுதி | 172-பாபநாசம் தொகுதி |
|---|---|---|
| **எஸ்.கே.வேதரத்தினம்**<br>மாநில விவசாய அணி துணைத்தலைவர் | **வண்ணை அரங்கநாதன்**<br>மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை செயலாளர் | **உ.மதிவாணன், பி.ஏ., பி.எல்.,**<br>மாநில விவசாய தொழிலாளர் அணி தலைவர் |

| திருவிடைமருதூர் தொகுதி | கும்பகோணம் தொகுதி | பாபநாசம் தொகுதி | குடந்தை மாநகரம் |
|---|---|---|---|
| **செ.ராமலிங்கம் MP**<br>தலைமை செயற்குழு உறுப்பினர்<br>**கோவி.செழியன்**<br>அரசு தலைமை கொறடா<br>தலைமை செயற்குழு உறுப்பினர்<br>**க.நசீர் முஹம்மது**<br>மாவட்ட அவைத்தலைவர் - 9443324430 | **க.அன்பழகன் MLA**<br>தலைமை செயற்குழு உறுப்பினர்<br>**ஜெ.நடராஜன்**<br>மாவட்ட பொருளாளர்<br>9894624974<br>**குட்டி.இரா.தெட்சிணாமூர்த்தி**<br>தலைமை செயற்குழு உறுப்பினர் | **மு.சண்முகம் MP**<br>தொ.மு.ச பொதுச்செயலாளர்<br>மாவட்ட கழக து.செயலாளர்கள்<br>**கோ.வி.அய்யாராசு**<br>9443806213<br>**S.துரை முருகன்**<br>9025256200 | **சு.ப.தமிழழகன்**<br>மாநகர கழக செயலாளர்<br>9443086522<br>மாவட்ட கழக அலுவலகம்<br>**க.செந்தில்குமார்**<br>மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர்<br>9566633331 |

| ஒன்றியம் / பேரூர் / பகுதி | தலைமை ஒன்றியம் / பேரூர் / பகுதி செயலாளர் | தொகுதி | பூத் எண்ணிக்கை | கிளை எண்ணிக்கை | கண்காணிப்பு குழு பெயர் | பொறுப்பு | செல் |
|---|---|---|---|---|---|---|---|
| திருப்பனந்தாள் மத்திய ஒன்றியம் | R.உதயச்சந்திரன் | 170 - திருவிடைமருதூர் தொகுதி | 30 | 103 | வை.வினோத்குமார் | அமைப்பாளர், வி.தொழிலாளர் அணி | 9843687587 |
| | | | | | எம்.வேணுகோபால் | தலைவர், வி.தொழிலாளர் அணி | 9952285750 |
| | | | | | சி.சங்கர் | துணை தலைவர், வி.தொழிலாளர் அணி | 9994836616 |
| திருப்பனந்தாள் மேற்கு ஒன்றியம் | கோ.க.அண்ணாதுரை | | 32 | 105 | G.K.M.ராஜா | அமைப்பாளர், இளைஞர் அணி | 9677494949 |
| | | | | | T.V.S.சிலம்பரசன் | துணை அமைப்பாளர், இளைஞர் அணி | 9787564943 |
| திருப்பனந்தாள் பேரூர் | T.M.சப்பாணி | | 9 | 15 | க.மதியழகன் | துணை அமைப்பாளர், கலை இலக்கிய அணி | 8903879767 |
| திருப்பனந்தாள் கிழக்கு ஒன்றியம் | மிசா.M.மனோகரன் | | 37 | 105 | P.ரவிச்சந்திரன் | அமைப்பாளர், விவசாய அணி | 9842447018 |
| | | | | | தி.துரை | தலைவர், விவசாய அணி | 9442635435 |
| | | | | | V.V.நடராஜன் | துணை தலைவர், விவசாய அணி | 9445772066 |
| திருவிடைமருதூர் வடக்கு ஒன்றியம் | செ.ராமலிங்கம் MP | | 69 | 123 | சே.வெங்கடேசன் | துணை அமைப்பாளர், இளைஞர் அணி | 9443155601 |
| | | | | | சன்.செள.ஸ்டாலின் | துணை அமைப்பாளர், இளைஞர் அணி | 7397630764 |
| | | | | | S.M.மணிகண்டன் | துணை அமைப்பாளர், இளைஞர் அணி | 9500769771 |
| | | | | | D.விஜய் பிரசாத் | துணை அமைப்பாளர், இளைஞர் அணி | 9790076726 |
| ஆடுதுறை பேரூர் | கோ.சி.இளங்கோவன் | | 44 | 60 | இராஜா.இரகுபதி | அமைப்பாளர், பொறியாளர் அணி | 9750977711 |
| திருவிடைமருதூர் பேரூர் | சுந்தர.ஜெயபால் | | | | ஜெ.சம்பத்குமார் | துணை அமைப்பாளர், பொறியாளர் அணி | 9941216838 |
| வேப்பத்தூர் பேரூர் | V.மகாலிங்கம் | | | | A.வள்ளிகண்ணன், | துணை அமைப்பாளர், பொறியாளர் அணி | 9442166688 |
| திருபுவனம் பேரூர் | எஸ்.கே.பஞ்சநாதன் | | | | ஆர்.சக்திவேல் | துணை அமைப்பாளர், பொறியாளர் அணி | 7845377046 |
| திருவிடைமருதூர் தெற்கு ஒன்றியம் | C.அம்பிகாபதி | | 57 | 171 | தம்பி தேவரத்தினம் | மு.மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் | 9894627237 |
| | | | | | R.F.இஸ்ரேல் | துணை அமைப்பாளர், சிறுபான்மை அணி | 9943193462 |
| | | | | | செள.தேவராஜ் | துணை அமைப்பாளர், மாணவர் அணி | 9092928940 |
| | | | | | மு.உதயகுமார் | துணை அமைப்பாளர், ஐ.டி. விங்க் | 9360219153 |
| கும்பகோணம் கிழக்கு ஒன்றியம் (திருவிடைமருதூர் தொகுதி) | J.சுதாகர் | | 12 | 32 | மு.ரகு | துணை அமைப்பாளர், வர்த்தகர் அணி | 7010575866 |
| கும்பகோணம் கிழக்கு ஒன்றியம் | J.சுதாகர் | 171 – கும்பகோணம் தொகுதி | 26 | 100 | R.முருகன் | அமைப்பாளர், வர்த்தகர் அணி | 9942075252 |
| | | | | | S.G.ராஜன் | தலைவர், வர்த்தகர் அணி | 9443395925 |
| சோழபுரம் பேரூர் | J.ஜபுருதீன் | | 7 | 15 | பு.காளிதாஸ் | துணை அமைப்பாளர், ஐ.டி. விங்க் | 9840052626 |
| கும்பகோணம் மத்தியம் ஒன்றியம் | T.கணேசன் | | 79 | 124 | V.சிவக்குமார் | அமைப்பாளர், விளையாட்டு மேம்பாட்டு அணி | 9443126565 |
| | | | | | R.வசந்தராஜ் | து. அமைப்பாளர், விளையாட்டு மேம்பாட்டு அணி | 9629816198 |
| | | | | | S.ஸ்டாலின் | து. அமைப்பாளர், விளையாட்டு மேம்பாட்டு அணி | 8098818575 |
| திருநாகேஸ்வரம் பேரூர் | சீ.தாமரைச்செல்வன் | | 14 | 15 | சுபா திருநாவுக்கரசு | அமைப்பாளர், மகளிர் அணி | 6383534829 |
| கும்பகோணம் மாநகரம் பகுதி – 1 | இரா.செல்வராஜ் | | 34 | 12 வார்டுகள் | ப.புகழேந்தி | அமைப்பாளர், மீனவர் அணி | 7539908311 |
| | | | | | M.யோகாநந்தம் | தலைவர், மீனவர் அணி | 9442741826 |
| கும்பகோணம் மாநகரம் பகுதி – 2 | இரா.கல்யாணசுந்தரம் | | 30 | 12 வார்டுகள் | A.சுந்தரமூர்த்தி | அமைப்பாளர், அயலக அணி | 9944555554 |
| | | | | | A.சாதிக் பாட்சா | துணை அமைப்பாளர், அயலக அணி | 9677382998 |
| கும்பகோணம் மாநகரம் பகுதி – 3 | T.V.கிருஷ்ணமூர்த்தி | | 33 | 12 வார்டுகள் | V.செல்வராஜ் | அமைப்பாளர், தொழிலாளர் அணி | 9442431188 |
| | | | | | S.பாரி | தலைவர், தொழிலாளர் அணி | 9443712741 |
| கும்பகோணம் மாநகரம் பகுதி – 4 | மு.கண்ணன் | | 32 | 12 வார்டுகள் | K.செல்வமுத்துகுமரன் | அமைப்பாளர், சுற்றுசூழல் அணி | 9787226050 |
| | | | | | G.மணிவர்மன் | துணை தலைவர், சுற்றுசூழல் அணி | 9442459388 |
| கும்பகோணம் மேற்கு (கும்பகோணம் தொகுதி) | சு.க.முத்துசெல்வம் | | 40 | 116 | கோ.மாரியப்பன் | அமைப்பாளர், இலக்கிய அணி | 8524923168 |
| | | | | | க.அண்ணாதுரை | துணைத்தலைவர், இலக்கிய அணி | 9443402850 |
| கும்பகோணம் மேற்கு (பாபநாசம் தொகுதி) | சு.க.முத்துசெல்வம் | 172 – பாபநாசம் தொகுதி | 23 | 37 | G.R.பிரகாஷ் | துணை அமைப்பாளர், இலக்கிய அணி | 9842095110 |
| | | | | | G.பாலாஜி | துணை அமைப்பாளர், இலக்கிய அணி | 9790590129 |
| சுவாமிமலை பேரூர் | S.பாலசுப்ரமணியம் | | 7 | 15 | R.ராஜேஷ் | துணை அமைப்பாளர், மாணவர் அணி | 9994383759 |
| பாபநாசம் தெற்கு ஒன்றியம் | N.நாசர் | | 58 | 131 | மு.கோபிநாத் | அமைப்பாளர், ஆதிதிராவிடர் அணி | 9965085851 |
| | | | | | அ.செல்வராஜ் | தலைவர், ஆதிதிராவிடர் அணி | 9940935703 |
| பாபநாசம் பேரூர் | ச.கபிலன் | | 14 | 15 | லண்டன் குணா | துணை தலைவர், வர்த்தகர் அணி | 9789355967 |
| பாபநாசம் வடக்கு ஒன்றியம் | கோ.தாமரைச்செல்வன் | | 57 | 159 | ஆர்.லெட்சுமணன் | அமைப்பாளர், அ.சா.ஓட்டுநர் அணி | 9443122481 |
| | | | | | நா.மலர்மன்னன் | தலைவர், அ.சா.ஓட்டுநர் அணி | 9443378993 |
| | | | | | முகம்மது கலிபா | துணைத்தலைவர், அ.சா.ஓட்டுநர் அணி | 7397536124 |
| அய்யம்பேட்டை பேரூர் | T.P.T.துளசி அய்யா | | 14 | 15 | K.வினோத்குமார் | துணை அமைப்பாளர், மாணவர் அணி | 9626383809 |
| அம்மாபேட்டை வடக்கு ஒன்றியம் | தியாக.சுரேஷ்குமார் | | 51 | 129 | D.R.அனந்தராமன் | அமைப்பாளர், நெசவாளர் அணி | 9894046069 |
| | | | | | V.S.மோகன் | தலைவர், நெசவாளர் அணி | 9994235820 |
| | | | | | K.சங்கர் | துணைத்தலைவர், நெசவாளர் அணி | 9994384719 |
| மெலட்டூர் பேரூர் | V.சீனிவாசன் | | 8 | 15 | தமிமுல் அன்சாரி | துணைத்தலைவர், சிறுபான்மை அணி | 9894671425 |
| அம்மாபேட்டை பேரூர் | தியாக.ரமேஷ் | | 12 | 15 | M.முபாரக் ஹுசைன் | துணை அமைப்பாளர், கலை இலக்கிய அணி | 9488110448 |
| அம்மாபேட்டை தெற்கு ஒன்றியம் | P.S.குமார் | | 51 | 99 | தா.அனிபா | அமைப்பாளர், சிறுபான்மை அணி | 9944886544 |
| | | | | | N.A.M.யூசுப்அலி | தலைவர், சிறுபான்மை அணி | 9443463786 |
| | | | | | H.ராயல் அலி | துணை அமைப்பாளர், சிறுபான்மை அணி | 9944885548 |

மாவட்ட கழகம் சார்பில் நியமிக்கப்பட்ட பணிக்குழுவில் உள்ள மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத்தலைவர்கள், தங்கள் அணியின் துணை அமைப்பாளர்களுடன் இணைந்து அந்தந்த வாக்குச்சாவடிக்கு நேரில் சென்று பூத் நிர்வாகிகள் (பி.எல்.சி), பி.எல்.ஏ-2 ஆகியோர்களுடன் நேரில் கள ஆய்வு செய்து 01.01.2024 அன்று 18 வயது நிறைவடையும் புதிய இளம் வாக்காளர்களை கண்டறிந்து அவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்க தேவையான ஆவணங்கள், மார்பளவு புகைப்படம் ஆகியவற்றை தயார் நிலையில் வைக்க ஆயத்தப்படுத்துவதுடன், முகாம் நடைபெறும் நாளான நவம்பர் 4, 5, 18, 19 ஆகிய தேதிகளில் அவர்களை முகாமிற்கு நேரில் சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடிக்கு அழைத்துச்சென்று அவர்கள் பதிவினை உறுதி செய்வதுடன், முகாம் நடைபெறும் நாட்களில் வாக்குச்சாவடிக்குச் சென்று படிவம்-6,6ஏ, 7, 8 போன்ற மனுக்களின் விபரங்கள் சேகரிப்பதுடன் அன்றைய தேதியில் நமது கழகத்திற்கு ஆதரவு நபர்கள் எத்தனை பேர், புதியதாக வாக்காளர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர் என்ற தகவலை தலைமைக்கு அனுப்ப ஏதுவாக மாவட்ட கழக அலுவலகத்திடம் ஒப்படைப்பதற்கு பட்டியல் தயார் செய்து அனுப்புவதுடன் முகாம் முடிவுற்றால் மேற்கண்ட தேர்தல் பணிகளை தொடர்ந்து செய்து புதிய வாக்காளர் சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களிலோ, வாக்காளர் சேகரிப்பதற்கான தாசில்தார் அலுவலகத்திலோ, மனு கொடுக்கும் கால அவகாசம் 27.10.2023 முதல் 12.12.2023 வரை கொடுக்கலாம். எனவே, நிர்வாகிகள், கழக தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்களை முழுமையாக இப்பணியில் ஈடுபடுத்திக்கொண்டு இந்த பணியின் விபரத்தினை மாவட்ட கழக அலுவலகத்தில் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க**

**சு.கல்யாணசுந்தரம் M.P.**
மாவட்ட கழக செயலாளர்



நாமக்கல் மேற்கு மாவட்டம் பள்ளிபாளையம் வடக்கு ஒன்றிய தி.மு.க. அலுவலகத்தை பல்லக்காபாளையத்தில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில், பள்ளிபாளையம் வடக்கு ஒன்றிய செயலாளர் நாச்சிமுத்து, நகர்மன்ற தலைவர்கள் விஜய்கண்ணன், செல்வராஜ் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர் சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு சேமிக்கும் நற்பழக்கத்தை ஊக்குவிப்பீர்!

# எதிர்கால வாழ்க்கையை நம்பிக்கைக்குரியதாக மாற்றுவது சேமிப்பே!

## உலக சிக்கன நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, அக். 31-**

**“பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு சிறு வயது முதலே சேமிக்கும் நற்பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும். எதிர்கால வாழ்க்கையை நம்பிக்கைக்குரியதாக மாற்றுவது சேமிப்பே” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், உலக சிக்கன நாளையொட்டி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

இதுகுறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உலக சிக்கன நாள் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

சிக்கனத்தின் இன்றியமையாமையை அனைவருக்கும் உணர்த்திடும் நாளாக அக்டோபர் திங்கள் 30 ஆம் நாள், ஆண்டுதோறும் “உலக சிக்கன நாள்” எனக் கொண்டாடப்படுவதைக் குறித்து பெருமகிழ்ச்சி அடைவதுடன் என் மனமார்ந்த வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒவ்வொரு குடும்பமும் சிக்கனத்தைக் கடைப்பிடித்து சேமித்தால், அதன்வாயிலாகக் குடும்பத்தின் தேவைகளை நிறைவு செய்து கொள்வதுடன், அவ்வப்போது ஏற்படும் எதிர்பாரச் செலவினங்களையும் சமாளித்திட இயலும்.

“ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை
போகாறு அகலாக் கடை”

என்ற குறளில் வள்ளுவர் பெருந்தகை, பொருள் வரும் வழி சிறிதாக இருந்தாலும், பொருள் செலவாகும் வழி பெரிதாக இல்லையெனில், அதனால் தீங்கு இல்லை என்று சிக்கனமாக வாழ்தலின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கிறார். சேமிப்பின் அவசியத்தை பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு சிறு வயது முதலே எடுத்துரைத்து, சேமிக்கும் நற்பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும். “இன்றைய சேமிப்பு, நாளைய வாழ்வின் பாதுகாப்பு” என்பதனைக் கருத்தில் கொண்டு, மக்கள் தங்கள் வருமானத்தின் ஒரு பகுதியை எதிர்காலத் தேவைக் காக சேமிக்க வேண்டும்.

சேமிப்பே ஒருவரின் எதிர்கால வாழ்க்கையை நம்பிக்கைக்குரியதாக மாற்றுகிறது. சேமிப்பது மட்டுமல்ல, அதைச் சரியான வீதத்தில் முதலீடு செய்வதும் முக்கியம். எனவே, உலக சிக்கன நாள் கொண்டாடப்படும் இவ்வேளையில், மக்கள் தங்கள் சேமிப்புகளை அஞ்சலக சேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்து அதன்மூலம் தங்கள் வாழ்வில் வளம் சேர்ப்பதுடன், நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் துணை புரிந்திட வேண்டுகிறேன்.

சேமிப்போம்! சிறப்பாக வாழ்வோம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

### கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்

# ஆண்டுதோறும் ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு!

## அமைச்சர் கே.என்.நேரு தகவல்!

*நாமக்கல், அக். 31-*

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.2.78 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள தினசரி சந்தை திறப்பு விழா நடைபெற்றது. விழாவில் நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார்.

வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் அ.கணேசமூர்த்தி, நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், நகரமைப்பு மண்டல திட்டக் குழு உறுப்பினருமான எஸ்.எம்.மதுரா செந்தில் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு கலந்து கொண்டு குமாரபாளையம் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.2.78 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள தினசரி சந்தையை திறந்து வைத்து தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க நாமக்கல் மாவட்டத்தில் கடந்த மாதம் ரூ.854.37 கோடி மதிப்பீட்டில் இராசிபுரம் கூட்டுக்குடிநீர் திட்டப் பணிகள் தொடங்கி வைக்கப்பட்டது. மேலும் நாமக்கல் பேருந்து நிலையம், புதிய மார்க்கெட் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்கு கடந்த இரண்டரை ஆண்டுகளில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நாமக்கல் மாவட்டத்திற்கு ரூ.1,600 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். நகரப் பகுதிகளில் பேருந்து நிலையம், குடிநீர் வசதி, சந்தை உள்ளிட்ட பொதுமக்களின் அடிப்படை வசதிகளை நிறைவேற்றிட நகராட்சி நிர்வாகத் துறைக்கு ஒவ்வொரு ஆண்டும் ரூ.24 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதில் அலுவலர்களுக்கான ஊதியம் போக ரூ.18 ஆயிரம் கோடி மக்கள் வளர்ச்சித் திட்டப் பணிகளுக்காகவே செலவிடப்படுகிறது.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் அறிவிக்கப்படுகின்ற துறை சார்ந்த அறிவிப்புகள் 3 மாத காலத்திற்குள் பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளதன் அடிப்படையில் உடனடியாக அரசாணைகள் வெளியிடப்பட்டு அதற்கான நிதி ஒப்பளிப்பு செய்து பணிகள் நடைபெற்று வருகிறது.

நகரப் பகுதிகளில் வளர்ச்சித் திட்டப் பணிகளை நிறைவேற்றிட கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் உள்ள 21 மாநகராட்சிகள், 490 நகராட்சிகள், 138 பேரூராட்சிகளில் வளர்ச்சித் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குமாரபாளையம் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.278.24 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள தினசரி சந்தையை திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த தினசரி சந்தை 2,188 சதுர மீட்டர் பரப்பளவில் 6 நிரந்தர கடைகளும், 155 தற்காலிக கடைகளும், 1 சிற்றுண்டியகம், 1 பெண்கள் ஓய்வறை, 1 கிடங்கு, 1 பாதுகாவலர் அறை மற்றும் 2 கழிப்பறை உட்பட பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

குமாரபாளையம் நகராட்சியில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றவுடன் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் சிறப்பாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.245,20 இலட்சம் மதிப்பீட்டில் 23 எண்ணிக்கை 1.83 கி.மீ. மண் சாலையினை தார் சாலைகள் மற்றும் பேவர் பிளாக் சாலைகள் அமைக்கும் பணி, ரூ.192.00 இலட்சம் மதிப்பீட்டில் அறிவுசார் மையம் கட்டும் பணி, ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் பூங்கா அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

கலைஞர் நகர்புர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.738.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் கட்டும் பணி, ரூ.360.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய வாரச்சந்தை கட்டும் பணி, தூய்மை இந்தியா திட்டம் (நகர்புரம்) 2.0 திட்டத்தின் கீழ் ரூ.1630.00 இலட்சம் மதிப்பீட்டில் 6 எம்எல்டி, கழிவுநீர் 20 கே.எல்.டி கசடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் உள்ளிட்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. மேலும் குமாரபாளையம் நகராட்சிக்கு தேவையான அனைத்து வளர்ச்சித் திட்டப்பணிகளும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று விரைவில் நிறைவேற்றப்படும் என நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் குமாரபாளையம் நகர மன்றத் தலைவரும், நகர வடக்கு திமுக செயலாளருமான த.விஜய்கண்ணன், துணை தலைவர் கோ.வெங்கடேசன், 14 வது வார்டு உறுப்பினர் வி.தீபா, நகராட்சி நிர்வாக சேலம் மண்டல இயக்குநர் இரா.பூங்கொடி அருமைக்கண், குமாரபாளையம் நகராட்சி ஆணையாளர் ஆ.சரவணன், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



தஞ்சை மத்திய மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு உயர்நிலை மேல்நிலைப் பள்ளி மாணவ – மாணவிகள் இடையே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கவிதைகள் மற்றும் திரைப்பட வசனங்கள் ஒப்பித்தல் போட்டி அண்ணா நூற்றாண்டு அரங்கம் தஞ்சை பழைய பேருந்து நிலையம் அருகில் நடைபெற்றது. விழாவை கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மாநில செயலாளர் அர.திராவிடமும், தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ.வும் தொடங்கி வைத்து. பரிசுகளை வழங்கினர். மாவட்ட அமைப்பாளர் சி.செல்லப்பா வரவேற்புரையாற்றினார். விழாவில் தி.மு.க. கட்சி முக்கிய பிரமுகர் தொண்டர்கள் பங்கேற்றனர்.

### முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சிறப்புரை! திருவள்ளூரில் நவம்பர் 5 அன்று

# சென்னை மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA-2) பயிற்சி பாசறைக் கூட்டம்!

## கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் கடந்த 22.03.2023 அன்று சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவை முன்னிட்டு கழகத்தில் ஒரு கோடி புதிய உறுப்பினர்களை சேர்த்தல், முழுமையாக பூத் கமிட்டி அமைத்தல் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மேற்கண்ட தீர்மானங்களின்படி, கழகத்தில் மொத்தம் இரண்டு கோடி உறுப்பினர்களை வெற்றிகரமாகச் சேர்த்து, ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA-2) நியமிக்கப்பட்டு தலைமைக் கழகத்தால் முழுமையாக சரிபார்க்கப்பட்டுள்ளது.

கழகத் தலைவர் அவர்களின் அறிவுரையின்படி சரிபார்க்கப்பட்ட வாக்குச்சாவடி பொறுப்பாளர்களுக்கென "வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA-2) ஒரு நாள் பயிற்சி பாசறைக் கூட்டம்" நடத்திட முடிவெடுக்கப்பட்டு, டெல்டா மண்டல கூட்டம் ஜுலை 26 அன்று திருச்சியிலும் - தென்மண்டலக் கூட்டம் ஆகஸ்ட் 17 அன்று இராமநாதபுரத்திலும் - மேற்கு மண்டலக் கூட்டம் செப்டம்பர் 24 அன்று காங்கேயத்திலும் - வடக்கு மண்டலக் கூட்டம் அக்டோபர் 22 அன்று திருவண்ணாமலையிலும் என இதுவரை 56 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குச்சாவடி பொறுப்பாளர்களுக்கு 20-க்கும் மேற்பட்ட கழகத்தின் சிறந்த சொற்பொழிவாளர்களைக் கொண்டு கொள்கை வழிகாட்டுதலும் தேர்தல் பயிற்சியும் வழங்கப்பட்டு, 4 மண்டலங்களிலும் பயிற்சிப் பாசறைக் கூட்டம் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்ததைத் தொடர்ந்து.

நிறைவாக, **சென்னை மண்டலத்திற்குட்பட்ட** மாவட்டங்களின் 12 ஆயிரம் வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பங்கேற்கும் "**வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA-2) பயிற்சி பாசறைக் கூட்டம்**" வருகிற **நவம்பர் 5 அன்று திருவள்ளூரில் உள்ள கலைஞர் திடலில்** தமிழ்நாடு முதலமைச்சர் **கழகத் தலைவர்** அவர்கள் சிறப்புரையாற்றிட நடைபெற உள்ளது.

சென்னை மண்டலத்துக்கு உட்பட்ட பின்வரும் 11 கழக மாவட்டங்களின், மாவட்டச் செயலாளர்கள், தமது மாவட்டங்களுக்குட்பட்ட 'வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA-2) கூட்டத்தை' கூட்டி, இப்பயிற்சி பாசறைக் கூட்டத்தின் அவசியத்தை எடுத்துரைத்து, தங்களது மாவட்டத்துக்கு உட்பட்ட வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA-2) அனைவரையும் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ள உரிய ஏற்பாடுகளை செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

**1.திருவள்ளூர் கிழக்கு** **2.திருவள்ளூர் மத்திய** **3. திருவள்ளூர் மேற்கு**
**4.சென்னை கிழக்கு** **5.சென்னை வடகிழக்கு** **6.சென்னை வடக்கு**
**7.சென்னை மேற்கு** **8.சென்னை தெற்கு** **9.சென்னை தென்மேற்கு**
**10.காஞ்சிபுரம் வடக்கு** **11.காஞ்சிபுரம் தெற்கு**

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18
நாள்- 29.10.2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



## தேர்தல் அறிக்கைகள்

# “சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்!”

■ நீரை.மகேந்திரன்



புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவுகளும், புத்தாயிரமாண்டு நுழைவும் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை உந்தித் தள்ளின. அந்த நேரத்தில் தமிழ்நாட்டின் ஆட்சியில் இருந்தது கலைஞர் என்பது, மாநிலத்தின் எதிர்காலத் திசையைத் தீர்மானிக்க நல்வாய்ப்பாக அமைந்தது. குறிப்பாக, அப்போது விரிவடைந்து கொண்டிருந்த புதிய பொருளாதாரக் கொள்கையை மிக வேகமாக எதிர்கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு இருந்தது.

1996-ஆம் ஆண்டு ஆட்சியின்போது, அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் எல்லாம் ஆட்சிக்கு வந்ததும் நடைமுறைக்கு வந்தன. சொல்லாத பலவற்றையும் நிறைவேற்றினார் என்பது வேறு. வேலை வாய்ப்பு, தொழில்துறை, தொழிலாளர் நலன், வணிக வளர்ச்சி, கூட்டுறவுத் துறை எல்லாவற்றுக்கும் தனித்தனி கவனம் கொடுத்தது அப்போதைய ஆட்சி.

### மக்கள் அளித்த சான்று

“திட்டமிட்டு செயலாற்றுதல், திறமை மிக்க நிர்வாகம், அவசரப்படாமல் அதே நேரத்தில் விரைந்து முடிவெடுத்து பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் பேராற்றல், இவை அனைத்தும் உங்கள் கழக ஆட்சிக்கு நீங்கள் அளித்த நற்சான்று” என்கிற உரையுடன் 1998-நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கையை வெளியிட்டார் கலைஞர்.

தி.மு.கழகத்தின் சாதனைகளைச் சொல்வதற்கு முன், அந்த இயக்கம் தமிழ்நாட்டுக்கும் இந்தியாவுக்கும் ஏன் அவசியமாக உள்ளது என்பதுடன் அந்த அறிக்கை தொடங்கியது.

“வலுவான சாம்ராஜ்யங்கள் பல, மொழிப் பாகுபாடுகளால் அழிந்திருக்கின்றன” என்று எச்சரிக்கும் அந்தத் தேர்தல் அறிக்கை, இந்தித் திணிப்பு விவகாரத்தில், அனைத்து மாநில மொழிகளையும் ஒன்றிய அரசின் ஆட்சி மொழிகளாக அறிவிக்க வேண்டும் அல்லது உடனடியாகத் தமிழை மட்டுமாவது அறிவித்தல் வேண்டும் என வலியுறுத்தியது.

### ஒத்துழைப்பு

1998-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையும் பொருளாதாரச் சீர்திருத்தத்தைத் தொடர்ந்து வலியுறுத்தியது. அதுவரை எந்த அரசியல் கட்சியும் தொடாத புதிய பொருளாதாரக் கொள்கை குறித்து, மிக நீண்ட விளக்கத்தினை அதில் பேசியிருந்தது தி.மு.க.

வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கும், வேலை வாய்ப்புத் திட்டங்களுக்கும் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும், விரைவானதும் அதிக அளவிலானதுமான பொருளாதார வளர்ச்சி (RAPID, HIGH, ECONOMIC GROWTH) என விரிவாகப் பேசியது. அதற்கு உத்தரவாதம் அளித்தால், தி.மு.க கழகம் தன்னால் இயன்ற ஒத்துழைப்பு அனைத்தையும் கொடுக்கும் எனப் புதிய பொருளாதாரக் கொள்கையை ஏற்றுக்கொள்வதைப் பார்க்க முடிகிறது.

1999-ஆம் ஆண்டில் நடைபெற்ற 13-வது நாடாளுமன்றத் தேர்தலின் போது வெளியிடப்பட்ட அறிக்கையும், பொருளாதாரக் கொள்கையின் இலக்குகளைத் தெளிவாகப் பேசின.

விலைவாசிக் குறைப்பு, நிதிப் பற்றாக்குறையைக் குறைத்தல், தொழில்துறையிலும் விவசாயத் துறையிலும் வேகமான வளர்ச்சி, சமுதாய நலன்களுக்கு அதிகமான நிதி ஒதுக்கீடு, அதன் வாயிலாகப் பெருவாரியான கல்விக்கூடங்கள், தேவையான மருத்துவமனைகள், வேலை வாய்ப்பு, வறுமை ஒழிப்பு இவைதான் நாம் கடைப்பிடிக்க வேண்டிய பொருளாதாரக் கொள்கை எனக் கருதுகிறோம் என்று தெளிவாகப் பேசி இருந்தது.

2001-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின்போது வெளியிட்ட தேர்தல் அறிக்கை, கழகத்தின் ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் குறித்து எடுத்து வைத்தது. 1967 -ஆம் ஆண்டுமுதல் 71 வரை, 1971-ஆம் ஆண்டு முதல் 76 வரை, 1989-ஆம் ஆண்டு முதல் 91 வரை, 1996-ஆம் ஆண்டு முதல் 2001 வரை என ஒவ்வோர் ஆட்சியின்போதும் செயல்படுத்தியவற்றைப் பட்டியலிட்டனர்.

சமூக முன்னேற்றத்துக்கு, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து ஒரு முகமை உருவாக்க வேண்டும் என்கிற ஒரு அக்கறையை 2004-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கையில் பார்க்க முடிகிறது.



**திராவிட முன்னேற்றக் கழகத்தின் நோக்கம் கண்ணியமானது. நோக்கம் மட்டுமல்ல, அதனை அடைய வகுக்கப்படும் வழிமுறைகளும் கண்ணியமானவை.**

அப்போது, தமிழ் மொழியைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டும் என்கிற கோரிக்கை வலுவாக முன்வைக்கப்பட்டது. உலகமயமாக்கல் தத்துவம் மேலோங்கி வரும் இத்தருணத்தில் தனியார் நிறுவனங்களிலும் இட ஒதுக்கீட்டு முறையைப் பின்பற்ற வேண்டும் என்பதை முன்வைத்துள்ளது.

### கதாநாயகனான அறிக்கை

2006-ஆம் ஆண்டுச் சட்டமன்றத் தேர்தல் அறிக்கை, அதுவரை இந்திய அரசியல் கட்சிகளிலேயே இல்லாத அளவுக்கு மிகப்பெரிய கவன ஈர்ப்பைக் குவித்தது. இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, கலர் டிவி, கியாஸ் ஸ்டவ் என உயிரோட்டமான பல திட்டங்களை அந்த அறிக்கை முன் வைத்தது. ஆட்சி அமைக்கப்பட்ட பின், அவை எல்லாமே வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் என இன்றளவும் பேசப்பட்டு வருகின்றன.

2011-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் அறிக்கை இன்னும் கூடுதலாக சமூக நலத் திட்டங்களை மக்களுக்குக் கொண்டு வந்து சேர்க்கும் விதமாகப் பல அறிவிப்புகளைக் கொண்டிருந்தது.

பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் அரிசியை முழுவதுமாக விலையில்லாமல் வழங்குவது, பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு இலவச கம்ப்யூட்டர், ஏழை நோயாளிகளுக்கு இலவச டயாலிசிஸ் , அரசு ஊழியர்களின் பேறு கால விடுப்பினை மூன்று மாதங்களில் இருந்து நான்கு மாதங்களாக உயர்த்துவது எனப் பலவற்றைத் தொட்டுக்காட்டலாம்.

### அறிக்கைகளின் அரசியல்

தி.மு.கழகத்தின் தேர்தல் அறிக்கைகளைக் குறித்து நீண்ட காலமாக இருந்து வரும் ஒரு கருத்து, ‘‘சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்” என்பது. இந்த முழக்கத்தினை 1967-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் இருந்து, 2011-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கை வரை உறுதி செய்ய முடியும்.

தமிழ்நாட்டில் நமது கண்ணுக்கு எதிரே உள்ள அத்தனை கட்டமைப்புகளிலும் கலைஞர் பெயரும், தி.மு.கழகத்தின் பெயரும் உள்ளது சாதாரணமாக அமைந்தது அல்ல. அதற்கான பெரும் போராட்டங்களே சமூக நீதி அரசியல் வரலாறாக உள்ளன.

‘தமிழ்நாடு என்கிற பெயர் மாற்றம்’, ‘மாற்றுத்திறனாளிகள் நல வாழ்வுத் திட்டம்’, ‘இலவச கான்கிரீட் வீடுகள்’, ‘இலவசக் கல்வி’, ‘வேளாண்மைப் பல்கலைக் கழகம்’, ‘சேலம் உருக்காலை’, நில உச்சவரம்பு’, ‘சிறு தொழில் வளர்ச்சிக் கழகம்’, ‘விவசாயிகளுக்கு இலவச மின்சாரம்’, ‘கான்கிரீட் சாலைகள்’, ‘மாணவர்களுக்கு இலவசப் பயண அட்டை’, ‘24 மணி நேரமும் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையங்கள்’, ‘நமக்கு நாமே திட்டம்’, ‘அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்’, ‘கணினிக் கல்வி’, ‘சமத்துவபுரம்’, ‘சட்டப் பல்கலைக்கழகம்’, ‘மகளிர் ‘சிறு வணிகக் கடன்’, ‘உழவர் சந்தை’, ‘சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்’, ‘டைடல் பார்க்’ எனத் தி.மு.க அளித்த எண்ணற்ற வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டு, அவை தமிழ்நாட்டின் சமூக வாழ்க்கையை மாற்றி இருக்கின்றன.

### ஐந்து முழக்கம்

நாடாளுமன்றத் தேர்தலாக இருந்தாலும், சட்டமன்றத் தேர்தலாக இருந்தாலும் கழகத்தின் தேர்தல் அறிக்கைகளில் தவறாமல் இடம்பெற்றவையாக ‘மாநில சுயாட்சி’, ‘இந்தித் திணிப்பு எதிர்ப்பு’, ‘மதச் சார்பின்மை’, ‘சமூகநீதி’, பொருளாதாரச் சீர்திருத்தம்’ இவற்றைப் பார்க்க முடிகிறது.

ஒன்றிய அரசின் அதிகாரக் குவிப்புக்கு எதிராக, கொள்கை சாரத்துடன் குரல் கொடுக்கும் கட்சியாக, இந்திய அளவில் இன்றளவும் நீடித்திருப்பது தி.மு.கழகம் மட்டும்தான்.

“ஒன்றியத்தின் அதிகாரக் குவிப்பு, கூட்டாட்சிக் கொள்கையிலும், ஜனநாயகத் தத்துவத்திலும் நம்பிக்கை கொண்டுள்ளவர்களின் பொறுமையைச் சோதிப்பதாக இருக்கிறது என்றும், மாநில சுயாட்சிக்கு வழி செய்யும் வகையில், அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும்” எனத் தொடர்ச்சியாகத் தேர்தல் அறிக்கைகள் வலியுறுத்தி வந்துள்ளன.

“மதவெறிக் காரணமாகப் பிற மதச் சகோதரர் எவர்க்காவது தீங்கு ஒன்று வருமானால், தி.மு. கழகம் பொங்கி எழுந்து அவர்களுக்குத் துணை நின்று காப்பாற்ற இமையளவும் தயங்காது, தயங்காது என்ற உறுதிமொழியையும் அளிக்கிறோம்” என்றது.

“திராவிட முன்னேற்றக் கழகத்தின் நோக்கம் கண்ணியமானது. நோக்கம் மட்டுமல்ல, அதனை அடைய வகுக்கப்படும் வழிமுறைகளும் கண்ணியமானவைகளே. அமைதியான சட்ட வரம்புக்கு உட்பட்ட, நாகரிகமான முறையில் பணியாற்றுவதே திராவிட முன்னேற்றக் கழகத்தின் குறிக்கோள்.

அரசியல் துறையில் மட்டுமல்ல, சமுதாயத் துறையிலும் சாதி சமய வகுப்புப் பேதங்கள் ஒழிக்கப்பட்டுச் சமுதாயத்தைத் திருத்தி புதுப்பிக்கப்பட வேண்டும் என்று மெய்வருத்தம் பாராது, பசி நோக்காது, கண் துஞ்சாது அல்லும் பகலும் அயராது உழைத்து வருகிறோம் என கலைஞர் தனது வாக்குறுதிகளில் அறிவிக்கிறார். இந்தக் கடப்பாட்டில் தி.மு.கழகம் என்றறைக்கும் உறுதி கொண்டு நிற்கும். ●

---

## திராவிட இயக்க இதழ்கள் - ‘கண்ணியம்’



‘அன்று குலோத்துங்கனுக்காக, ‘கலிங்கத்துப் பரணி’ பாடினார் செயங்கொண்டார். இன்று செயங்கொண்டத்தில் குலோத்துங்கன் தமிழ்ப் பரணி பாடுகிறார். எழுத்துத் துறையில் நாளை ஒரு வேந்தனாகத் திகழ்வார்’ என்று பேரறிஞர் அண்ணாவால் பாராட்டப்பட்ட தி.மு.க. தொழிற்சங்கவாதி ஆ.கோ. குலோத்துங்கன் அவர்களால் நடத்தப்பட்ட இதழ் **‘கண்ணியம்’**.

முகப்பு அட்டையில் **‘சமூகக் கலை இலக்கியத் திங்களிதழ்’** என்ற பிரகடனத்தோடு 1970-ஆம் ஆண்டு ஜூன் 10 அன்று இந்த இதழ் தொடங்கப்பட்டுச் சுமார் 30 ஆண்டுகளுக்கும் மேலாக வெளிவந்தது. தமிழ், தமிழர் பெருமை சார்ந்த படைப்புகள் இந்த இதழில் வெளிவந்துள்ளன.

ஒவ்வோர் எழுத்தாளருக்கும் இலட்சியங்கள், எண்ணங்கள், கொள்கைகள் எனப் பரந்துபட்ட பார்வை இருக்கும். ஒவ்வோர் எழுத்தாளரும் ஏதோ ஒரு குறிக்கோளுடன் எழுதுகிறார்கள். அவ்வாறு எழுதும் எழுத்தாளர்களை 1990-ஆம் ஆண்டு முதல் ‘நான் ஏன் எழுதுகிறேன்?’ என்ற தலைப்பில் எழுத வைத்து, எழுத்தாளர்களின் எண்ணக் கருத்துக்களைத் தொடர்ந்து பல இதழ்களில் பதிவு செய்தது இந்த இதழின் மிகப்பெரிய சாதனை. அந்த எழுத்தாளர்களின் பேட்டிகள் தொகுக்கப்பட்டு 20 தொகுதிகளாக வெளிவந்துள்ளன.

---

## :ப்ளாஷ்பேக்



சேக் அப்துல்லா சாகுல்

### பிரச்சாரத்தில் பாராட்டு!

என் தந்தை க.சாகுல் அவர்கள், இளைஞர் அணி தொடங்கப்பட்டதிலிருந்து தீவிரமாகச் செயல்பட்டு, போடி நகர இளைஞர் அணி அமைப்பாளராக சில காலம் பொறுப்பு வகித்தார். பின்னர் தலைமைக் கழகத்தால் போடி நகரச் செயலாளராகப் பணியாற்றும் வாய்ப்பும் வழங்கப்பட்டது. 2005-ஆம் ஆண்டு தளபதி அவர்கள் அடுத்தாண்டு நடைபெறவிருந்த சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, போடிக்கு வருகை தந்து தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். இளைஞர் அணியிலிருந்து தலைமைக் கழகப் பொறுப்பை வகித்து வந்த என் தந்தையைத் தனிப்பட்ட முறையில் பாராட்டி, தளபதி அவர்கள் பேசியதை 8-ஆம் வகுப்பு படிக்கும் சிறுவனாகக் கேட்கும் வாய்ப்பும் எனக்கு வாய்த்தது. தனிப்பட்ட முறையில் எனக்குப் பெருமையூட்டும் புகைப்படமாக இதைக் குறிப்பிடுவேன்.

**-சேக் அப்துல்லா சாகுல், போடி நகரம், மாணவர் அணி துணை அமைப்பாளர், தேனி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033- 24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

---


## கருவூலம்

### மக்கள் நம் பின்னால்!

**1947-ஆம் ஆண்டு, மே மாதம் சென்னை, மயிலாப்பூர் திராவிட இளைஞர் கழக ஆண்டு விழாவில் பேசிய தந்தை பெரியார், கழகக் கட்டுப்பாடுகள் குறித்தும் அணுகுமுறை குறித்தும் விளக்கினார். “நம்மைப் பொறுத்தவரை நம் பின்னாலே மக்கள் வர வேண்டுமே தவிர, பாமர மக்கள் பின்னாலே ஓடுவது இல்லை. கல்லடி பட்டாலும் சரி, வெற்றி அடைந்தாலும் சரி, நமக்குப் பட்டதைச் சொல்லியே தீருவோம்”.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 286




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP. No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131